
# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்



ட்ட நிலா ★ ஆயுள் நண்பன் [கதைகள்]

விலை 16 காசு



சென்னை,
7—3—61

தம்பி 'அரங்கண்ணல்' துவங்கும் 'அறப்போர்' நமது இயக்கத்துக்கு அணிகலனாகவும், படைக்கலமாகவும் திகழும் என்பதற்குக் காரணங்கள் தேடித் கொண்டிருக்கத் தேவையில்லை—என் எண்ணங்களை உடனிருந்து அறிந்து, பக்குவமும் பயிற்சியும் நான் பாராட்டி மகிழத்தக்க அளவிலும் வகையிலும் பெற்றவர், அரங்கண்ணல் என்பதை நாடு அறியும்.

'அறப்போர்' நமது இயக்கம் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் மேற்கொண்டுள்ள முறையாகும்.

'அறப்போர்' உள்ளத்துக்கு, துணிவும் வேண்டும்; தூய்மையும் வேண்டும்; தன்னல மறுப்பு மிக மிகத் தேவை.

தாக்குவது எளிது—தாங்கிக் கொள்வது கடினம்.

தாக்கும்போது, மனிதன் மிருக நிலை அடைகிருன்; தாங்கிக் கொள்ளும்போது, மனிதன், மேலோன் ஆகிருன்.

இதனைக் கூறும் போது, செயல்படுவது எளிது போலத் தோன்றும்—ஆனால் செயல் படும்போதோ ஓராயிரம் எண்ணங்கள் குடைவதைப் பொறுத்துக் கொள்ள வேண்டுவதும், ஏச்சுப் பேச்சுக்களைக் கேட்டுக் கொந்தளிப்பு ஏற்படாதபடி காப்பு தேடிக் கொள்வதும் எத்துணைத் தேவைப் படுகிறது என்பதறிந்து, திகைப்பே ஏற்படும்.

எனினும், சீரியதோர் பணியினிலே தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள், அறப்போர் உள்ளம் பெற்றாக வேண்டும்.

அறப்போரின் முதற்கட்டம், அவரவரும் தத்தமக்குள்ளாகவே எழும் எண்ணங்களுடன், எழுச்சிகளுடன், கோபதாபங்களுடன். ஆசாபாசங்களுடன் போரிட்டு வெற்றி காண்பதாகும். அந்த வெற்றி அளித்திடும் அளவிடற்கரிய ஆற்றல், விளக்கிடக்கூட இயலாது—உணரத்தான் முடியும். மிக மிக நீண்டகாலம் பூமிக்கடியில் புதையுண்டு கிடக்கும் கரித்துண்டுதான், ஒளிவிடும் வைரம் ஆகிறது என்கின்றனர்.

தம்பி அரங்கண்ணல் '**திராவிடநாடு**' இதழின் உயிருட்டத்துக்குப் பொறுப்பேற்று நடத்தி, தமிழரை மகிழ்வித்தவர்.

சுவையும் பயனும் இழைந்த முறையில், சொல்லோவியம் பல அளித்து, தமக்கென ஓர் நல்லிடம் பெற்றுத் திகழ்பவர்.

'**அறப்போர்**', எழிலும் ஏற்றமளிக்கும் முறையும் கொண்ட, நாடு போற்றும் நல் ஏடாகத் திகழும் என்பதிலே எனக்கு ஐயமில்லை — நாட்டவரும் இதே கருத்தினர் என்பதால், ஆதரவு நிச்சயம் நான் மகிழத்தக்க **அளவில்** இருக்கும் என்பது உறுதி.

" **அறப்போர்** ", தனக்கென ஓர் நல்வழி வகுத்துக் கொண்டு, வெப்பமற்ற ஒளியும், வெறுப்பற்ற விளக்கமும், கொண்டதாக, கருத்தோவியங்களைத் தந்து, அறிவுத் துறைக்கு ஆக்கம் தேடித்தரும்.

'**அறப்போர்**' வண்ணம் கொண்டதாகவும் இருக்கும் — தம்பி இளையோன்--வண்ணம் தேடிட, காட்டிட, இயலும் — தேவையுங் கூடத்தான்.

இல்லமெங்கணும் இந்த எழிலேடு சென்று, நாட்டு விடுதலைக்கான அறப்போர் உள்ளத்தை அனைவரும் பெற்றிடச் செய்திடல் வேண்டும். அத்தகு பணியினிலே, '**அறப்போர்**' ஈடுபட, உமது நல்லாதரவு தேவை — அதனை அளித்திடுவீர்கள் என்ற நம்பிக்கையுடன், இதழை வாழ்த்தி வரவேற்கிறேன்.

அன்பன்,
**அண்ணாதுரை**

அறப்போர்

ஆசிரியர் அரங்கண்ணல்

ஒளி 1 | வெள்ளி 10—3—61 | கதிர் 1

# அன்புள்ளோரே!

ஏடு துவங்குகிறது-கேடுற்றுக் கிடக்கும் நாடு, பீடு நடையும் பெருமித வாழ்வும் கொள்ள வேண்டுமெனக் கூறிடும் தொண்டர்களிலே, ஒருவனுன, என் முயற்சியால்.

எழுத்துத் தொழில், எனக்குப் புதியதல்ல; எனினும், ஏட்டினை நடாத்தும் பொறுப்பு என்பது, நான் எடுத்தடி வைக்கின்ற புது வீடாகும்.

"என்ன பிரமாதம்! எழுதினுல், கோர்க்க ஆளுண்டு. தாள் உண்டு. அச்சடிக்கப் பொறி உண்டு. கட்டியனுப்ப ஆள் உண்டு விற்றனுப்ப, விற்பனையாளர்கள் உண்டு," என்று சொல்லிய காலமும் ஒன்று இருந்தது உண்டு. இந்தக் காலமோ, வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் எவையெவையுண்டோ அவைகள் மக்களுக்குக் கிடைக்காமற் செய்வதே "ஐந்தாண்டுத் திட்டம்" எனும் அசையாத உறுதி கொண்ட, அன்பர்கள் ஆட்சி நடத்தும் காலம்.

ஏடு துவங்க வேண்டுமென்று எண்ணி, ஏற்பாடுகளைத் துவங்கியபோது இருந்ததைவிட, தாள் விலை ஏறிவிட்டது, தயாளர் மொரார்ஜி தேசாயின் தயவால்! எண்ணியதற்கு மாருகப் பக்கங்களைக் குறைக்கவோ, "ஆசிரியர்" என்கிற பொறுப்பு, என்னை அனுமதிக்கவில்லை. ஏட்டை நடாத்துகிறவன் என்கிற பொறுப்போ, "எப்படி முடியும்? எவ்வளவுதான் செலவழிப்பாய்!" என்று மிரட்டுகிறது.

ஆசைக்கும், அச்சத்துக்குமிடையிலே "அறப்போர்" துவங்குகிறது! அன்பர்களின் பேராதரவையும், கொண்ட கொள்கையின்பால் எனக்குள்ள நம்பிக்கையையும் மூலதனமாக எண்ணி!!

வண்ணமும், வகைவகையான தகவல்களும், வார்த்தெடுத்துக் கொடுகக வேண்டும் என்பது, என் ஆசை. இதற்கானத் திட்டங்களும், இருக்கின்றன. முதல் முயற்சியாக திராவிட மொழிகளாம், கன்னடம் கேரளம், ஆந்திரம் முதலியவைகளின் இலக்கிய வளங்களை, சுவைப்பதற்கான நல் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றேன். வளரும் இலக்கியத்தோடு நமக்கும் அவர்களுக்குமிடையில் பின்னிப் பிணைந்து கிடக்கும் நல்லுறவை, வளர்ப்பதற்கான, நற்பணியாக, அது அமையும் என்றும் நம்பியுள்ளேன். உலக மொழியான ஆங்கிலத்தில் சுவை குன்ருது, பிறர் பாராட்டிய பல கதைகளையும், ருசியுள்ள தகவல்களையும், செலவினைப் பாராது, தரவும் திட்டமிட்டுள்ளேன். பிற மொழிக் கதைகள் சிலவற்றையும், வளர்ந்திடும் உலக இலக்கியங்களின் உன்னதப் படைப்புகளையும், பெறுவதற்கான, ஏற்பாடுகளைச் செய்து வருகிறேன்.

நம்பிக்கையில் வாழ்வோர், நாம்! நமக்குள்ள பெரியதொரு,மூலதனமும், நம்பிக்கைதான். பண மூட்டையைக் கட்டி வைத்துக் கொண்டு, பளபளப்பான ஆட்டம் போடக் கூடிய வசதியும் வாய்ப்பும் நமக்குக் கிடையாது. நம்மிடையே எப்படி உழவர்களும், கலைத் தொழிலாளிகளும், அன்ருடம் கூலி வேலை செய்வோரும், இருக்கிருர்களோ, அதுபோல, "எழுத்தை"த் தொழிலாகக் கொண்டு, வாழ்கிறவன் நான். தொழிலேது மற்ற சோம்பேறியல்ல! அரசியல் என் பணி.

அந்தப் பணியினைச் செவ்வனே செய்ய, அப்பனும் பாட்டனும் தேடி வைத்து விட்டுப்போன, செல்வமெனும் பேழை என் போன்ருருக்குக் கிடையாது. இரவு பகல் விழித்து எழுதுவது என் தொழில். கந்தனையும் கடம்பனையும் கூவி, கட்டுக் கதைகளை எழுதுவதற்குப் பதில், இலட்சியத்துக்காக எழுதி, அதற்கான ஆதாரங்களைத்தேடி எடுத்து, புதிய வாள்களை உற்பத்தி செய்யவும், கூர்மழுங்காமல் இருக்கிற வாட்களுக்குச் சாணை தீட்டவுமானப் பணியினை, நான் செய்கின்றேன். என் எழுத்தைப் பயன்படுத்த, திரையுலகும், நூல்வெளியிடுவோரும் விரும்பினுல், அங்கும் என் இதய முழக்கத்தைச் செய்வேனே தவிர, வளைந்துவிட மாட்டேன்! வசதி கிடைத்தால் அதைக் கொண்டு, குடும்பம், கோடையில், அடிபடாமல் செய்து விட்டு; அதன் மூலம் ஏற்படும், ஓய்வைக்கொண்டு இயக்கத்துக்காக உழைக்க, இவ்வளவு நேரமும்மன நிம்மதியும் கிடைத்ததே என்று மகிழும் கூட்டத்தைச் சேர்ந்தவன். மாலை வேளை, என் மனதை, உல்லாசத்துக்கு இழுப்பது இல்லை! வானத்திலே தோன்றும் செந்நிறம், என் கொடியிலிருக்கும் சிவப்பினையுமே சொலலும். இப்படிப்பட்ட எனக்கு, துணை, என் அண்ணன் தம்பிகளான, நாட்டு மக்கள்தான். உங்களுடைய அரவணைப்பே, எனக்கு ஆனந்தம்! நல் யோசனைகளையும், குறைகண்ட இடத்துச் சுட்டிக் காட்டியும், கொள்கைக்கு உறுதி பயக்கும் தகவல்களை வழங்கியும், என்னுடைய உடன் பிறப்புகளான நீங்கள் உதவ வேண்டும், என்று உரிமையோடு கேட்டுக் கொள்ளுகிறேன். உங்களையன்றி, கேட்பதற்கு, யார் எனக்கு இருக்கிருர்கள்!!

"அறப்போர்" எனும் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் எரிமலை வெடிக்கிறது, என்பது போலிருப்பதாக என் தோழர் ஒருவர், எழுதியிருக்கிருர். இரண்டொருவர், அன்பின் மூலம் எதையும் சாதிக்கலாம் எனும் கொள்கை கொண்ட நீங்கள் "போர்! போர்!!" என்று முரசு கொட்ட ஆரம்பித்து விட்டீர்களே, எனவும் சொன்ஞர்கள். இன்னும் சிலர், அறம் என்ருல் தர்மம், போர் என்ருல் யுத்தம், உங்கள் ஏட்டுக்குப் பெயர் 'தர்மயுத்தமா' என்றும் கேட்டார்கள். இப்படிக் கேட்டவர்கள் என் ஆந்திர, கன்னட நண்பர்கள். அறம் என்பதனைப் பகுத்து வாழ்ந்தவன், தமிழன்! அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல், எனும் நான்கையும் இதயத்திலிருந்து எடுத்தெறிந்துவிட்டு வாழ்தல், என்று தென் புலத்தின் ஒளி விளக்காம் திருவள்ளுவப் பெருந்தகை, தெரிவிக்கிருர். பிறர் ஆக்கம் பொருமையும், புலன்கள்மேல் செல்கின்ற அவாவும், அவை ஏதுவாகப் பிறர்பால் வரும் வெகுளியும், அதுபற்றி வரும் கடுஞ் சொல்லும், ஆகிய நான்கும் இயக்கா இயன்றது அறம் என்கிருர், அந்த, அற்புத ஞானி! ஆமையிலேயே பொல்லாத ஆமை, பொருமை என்றனர், நம் புலவர்கள். சீலராம் புத்தர் செப்பினுர், ஆசையை அகற்று அதுவே தொல்லைக்குக் காரணம், என்று. சிறப்புறு இயேசு, சினம் தீது—அடிக்க வந்தவருக்கு அன்போடு காட்டு உன் அடுத்த கன்னத்தை, என்ருர். நல்லதை நினை, பேசு, என நவின்ருர், நபிகள் நாயகம்! இது, அத்தனையையும் சேர்த்தே "அறம்" என்ருர், வள்ளுவர்!!

அரசியலில், இந்த அறவழி அமைய வேண்டுமென விரும்பி, தன்னைப் பொறுத்தளவில் வெற்றி கண்டவர் உத்தமர் காந்தியடிகள்.

திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் வழி காட்டியென விளங்கும் அறிஞர் பெருமான் அண்ணுவும், ஏற்றிருக்கும், வழி அறவழியாகும். அந்த அறவழியின்பால் நிற்கும், பெருமைக்குரிய நான், 'அறப்போர்' மூலம், அவ்வழி சிறக்குமளவில், என்னுடையபங்கைச் செய்வேன். இயற்கையாகவே, அண்ணுவுக்குக் 'கடுஞ்சொல்' பிடிக்காது! இன்னு செய்தாரையும் இனியன சொல்லி, நம்முடைய கருத்துக்கு ஈர்த்தல் வேண்டும் என்கின்ற, உயரிய பண்பாளர், அவர்!! நம் [illegible] விடுதலை இயக்கத்துக்கு மட்டுமின்றி, உலகத்துக்கே இந்தப் பண்பு அமைதல் வேண்டும், என்பேன்.

உண்மைகள் இலாதவிடத்து, உரத்தக் கூச்சலும், மறவழிகளும் தேவை! நாம் தொடர்ந்திருக்கும் ஒரு புனிதமான போருக்கு, யாரும், அப்பழுக்குச் சொல்ல முடியாது. இன்னெரு ஆதிக்கத்தின் பிடியிலிருந்து, உரிமை பெற்று, தாயகத்தை மீட்க நாம் போராடுகிருேம். இந்தப் போருக்கு நமக்கு வாள், உண்மை! கேடயம், அன்பு!! இரண்டையும் பெற்றுள்ள, நாம், எதற்கும் கலங்க வேண்டியதில்லை. நாமட்டும், அறவழியில் நடந்து, மாற்ருர் பிற வழிகளில் தொல்லைகள் செய்வாராயின், வாளாயிருத்தலாமோ, எனக் கூடும். ஒரு கொள்கை வெற்றி பெறவேண்டுமாயின், அது தாங்கும், காயங்கள் மிகமிக முக்கியமானவையாகும்! அத்தழும்புகளே, ஒரு இயக்கத்தின் சின்னமாகும்! அடிக்க அடிக்கத் தாங்கிக் கொண்டு" அன்பரே! அன்பே எம்வழி. அடியும். உம் கை வலிக்கும். வலிக்காதபடி பார்த்துக் கொண்டு, அடியும்", என்று சொன்னுல், ஓங்கியவன் கூட. வெட்கித் தலைகுனிவான். இப்படிப்பட்ட, ஒரு நன்னெறியை, நல்வழியை, அறப்போரை நமக்கெல்லாம் தந்து, வழி காட்டி வருகிருர், அண்ணு! அந்த அண்ணனின் வழிக்கு ஒரு ஊன்றுகோலாக, ஏடு வருகிறது—உங்கள் ஏடு என்று சொல்லி, இன்று முதல் உங்கள் கையிலே, தவழ விட்டுவிட்டேன்!!



# பாசம் வென்றது.....!

## பகைமை அகன்றது!!



# நாம் எல்லாம் சேர்ந்தும்!

"ஏற்கனவே இருதய நோய்க்கு ஆளானவர்! உண்ணாவிரதமிருக்கும் சம்பத்தைப் போய்ப் பார்த்தது முதல், இரண்டு நாட்களாகிறது; உணவெடுத்து. யோசிக்கிறார்! பெருமூச்சு விடுகிறார்! கண்ணீர் வழிகிறது அடிக்கடி! திடீரென இருதயம் அதிர்ச்சியுற்று, இத்தனை நாளும் உழைத்தது போதும் என்று ஒடுங்கிவிட்டால்? இலட்சக் கணக்கான இருதயங்களைத் தன் பேச்சாலும் எழுத்தாலும் தடவித் தடவி இலட்சிய வெற்றி கண்ட அண்ணாவின் இருதயம், அடங்கிவிட்டால்? நமது ஒரே ஒரு தலைவருக்கு, எதிர்பாராமல் ஏதாவது ஆகிவிட்டால் ......"

டபிள்யு. கே. தேவராசன் அவர்கள் இல்லத்தில் கூடிக்கிடந்த கழகக்காவலர்கள் அனைவரது உள்ளத்திலும், இந்த எண்ணம், அலைமோத ஆரம்பித்ததும், எல்லோருமே அழலானோம். எதற்கும் கலங்காதவரெனப் பெயர்பெற்ற மதுரை முத்து, "அண்ணா! எங்களைத் திகைக்க வைக்காதீர்கள். ஏதாவது சாப்பிடுங்கள்" என்று சொல்லும்போதே' ஓவென்று கதறலானார். உடனிருந்த சி. வி. எம். அண்ணாமலை, உணர்ச்சிவயப்படுகிறவர், சீக்கிரம். அவரோடு வந்திருந்த பொதுக்குழு உறுப்பினர்களான காஞ்சி கே. டி. எஸ். மணி, சபாபதி ஆகியோருடன் "அண்ணா!, அண்ணா!!" என்று கதறலானார். துறையூர் அழகமுத்து, வெளியே சொல்[illegible]லாமல், வாயிலே துணி[illegible]யை வைத்துக் கொண்டு தேம்பலானார். திருச்சி மாவட்டத் தீரரெனப் பெயர் பெற்ற அம்பில் தர்மு, "அண்ணா! சம்பத்தின் மனதைச் சரிபடுத்த, திருச்சியில் நடந்த தீதான நிகழ்ச்சிக்கு நான் விலகுவதுதான் பரிகாரம் என்றால், இப்பொழுதே விலகிவிட்டு உங்களுடைய சாதாரணத் தொண்டனாகிவிடுகிறேன். நீங்கள் மட்டும் இப்படிச் சாப்பிடாமல், அடிக்கடி வடிக்காதீர்கள் கண்ணீர்...." என்று அழுதுகொண்டே, இரு கைகளையும் எடுத்துக் கும்பிடலானார். அருகிலிருந்த அலுமேலு (அப்பாதுரை) அம்மையாரோ, மூலைக்குப் போவதும், மூக்கைச் சிந்துவதுமாக இருந்தார்' சத்தியவாணிமுத்து அவர்களோ, கண்ணீர் வழிந்த கண்களுடன் காட்சி அளித்தார். குன்றெடுக்கும் நெடுந்தோள் கொண்ட குணக்குன்று நெடுஞ்செழியனும் அவர் தம்பி செழியனும், அண்மையில், அவர் தம் அன்னை இறந்தபோது அழுததைத்தான், இத்தனை ஆண்டுகளிலும், முதன் முதலாக நான் கண்டிருக்கிறேன். அதேபோல, அந்த 25-ம் தேதியன்றும், தோற்றம் அளித்தனர்! உருவில் இளைத்தவரானாலும் எஃகுள்ளம் கொண்டவர் பேராசிரியர் அன்பழகன்! அவரும் எங்களைப்போலானார். அண்ணன் சி. பி. சி. கண்களில் ஆண்டு பதினேழாக, நான் கனலைத்தான் கண்டிருக்கிறேன். நரைத்த தலையும் முதிர்ந்த தோற்றமும்கொண்ட அவரும் அழலானார். உருவில் புராணத்தில், கூறப்படும் 'அர்ச்சுனன்' என்பவர் இவர்தானோ, அவன் விட்டதாகச் சொல்லும் அன்பு மழையைப் போலச் சொல்மழையைச் சொரியும் இந்த மிடுக்குள்ள இளைஞன் என்று எவரும் எண்ணும் நாஞ்சில் மனோகரனின், சிரித்த உருவைத்தான் நான் கண்டிருக்கிறேனே தவிர, கொள்கை உறுதிகொண்ட அக்குணாளனையும், அண்ணாவின் பெருமூச்சு அலைக்கழித்து அழவைத்ததை அன்றுதான் பார்த்தேன். அன்புடை என். வி. என். அவர்களைப் பற்றித்தான் யாருக்கும் தெரியுமே! உணர்ச்சியின் உருவமான அவர், தெம்படைவார், உடனே தேம்புவார், பரபரப்பும் பதைப்புமாகவே அங்கே உலவிக்கொண்டிருந்தார், அடிபட்ட மான்போல! திருவண்ணாமலை ப. உ. சண்முகம், எந்தச் சிக்கலையும் சிரித்தே அறுத்துவிடலாம் என்றெண்ணுபவர், அவரால் பேசவேமுடியவில்லை. கலங்காமனம்கொண்ட வேலூர் சாரதி, தூய்மை துலங்கும் உருக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம், பொறுமைக் குன்று போளூர் சுப்ரமணியம், 15 ஏற்[illegible]எல். ஏக்[illegible]ருந்தாலும் 'எம். எல். ஏ.' என்றே எல்லோரும் அழைக்கும் ஏ. கோவிந்தசாமி, எழுச்சி இளவல் எம். பி. சுப்ரமணியம், சிறுகதை மன்னர் டி. கே. சீனிவாசன் எல்லோருமே, அண்ணாவின் நிலைமையையும், அவர் தோற்றத்தையும், கண்டு துடித்த நிலையில் இருந்தனர். அன்பா காஞ்சி சி. வி. இராசகோபால், தோட்டத்தில் போய் உட்கார்ந்தவர்தான்! வரவேயில்லை!! அண்ணாவுடன் அதட்டியும் அன்போடும் பேச உரிமை படைத்த முதியவர் காஞ்சி அ. க. தங்கவேலர், காரில் ஓடி, பழம், ஓவல் முதலியவைகளைக் கொணர்ந்து, "இந்தா! இதையாவது சாப்பிடு!" என்று சொல்லலாம் என்கிற தெம்போடு, அண்ணாயிருந்த அறைக்குள் போனவர். வரும்போது கண்களைத் துடைத்துக் கொண்டே வந்தார்! உண்மையில் எங்கள் எல்லோருக்கும், ஒன்றும் புரியவில்லை! அங்கே சம்பத்! இங்கே அண்ணா! ஏதாவது ஆகிவிட்டால்......!!—என்கிற எண்ணமே, எங்களுக்கு அலைமோதலாயிற்று.

அண்ணாவின் மனம், எப்போதுமே அதிர்ச்சிகளைத் தாங்காது. உலக உத்தமர் காந்தியடிகள் இறந்தபோது ஊணும் உறக்கமும் கொள்ளாது அவர் துடித்ததையும், மறைந்த கலைவாணர் என். எஸ். கே., பாகவதர் சிறைவாசம் புகுந்தபோதுத் தேம்பிய நிலையில், கதறிக்கதறி புரண்டதையும், கண்டிருக்கிறேன் நான் இயற்கையிலேயே, அவர் மனம் மிகமிகப்பலவீனமானது இந்தப் பலவீனத்தாலேயே யாராவது கழகத்தோழர்கள் குற்றம் செய்தால்கூட, ஏதாவது சொன்னால் அவர்தம் மனம் என்ன பாடுபடுமோ என்று எண்ணி, கண்டிக்காமலேயே இருந்துவிடுவார்! அவ்வளவு இளகிய மனம் படைத்த அவருக்கு ஏற்பட்டிருந்த சங்கடம் எங்களுக்குப் புரியாமலில்லை. குழந்தைக்குக் குழந்தையாய், குறும் சிரிப்புப் பருவமுதல் பழகிக்குடும்பத்தில் ஒருவராயிருந்து, சேர்ந்து சிரித்து, உண்டு அணிந்து உறங்கிய சம்பத் அங்கே உண்ணாமல் கிடப்பதை அவரால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? அவரால் மட்டுமா? எங்களால்தான் எப்படி முடியும்!! அண்ணாவின்,

அரங்கண்ணல்

கண்ணீர்வடியும் கண்களையும் கலங்கிய தோற்றத்தையும் உண்ணா நிலையையும், சம்பத் கண்டிருந்தால், நிச்சயம் உடனே நிறுத்தியிருப்பார் உண்ணாநோம்பினை! அண்ணா படும் அவதியை நிச்சயம் சம்பத்தால் தாங்கியிருக்க முடி





யாது!! அவர்தான் மூன்று மைலுக்கு அப்பால் கிடக்கிருரே! என்ன செய்வது?— என்று நாங்கள் கலங்கிக்கொண்டிருந்த நேரத்தில் நிலைமையைச் சம்பத்திடம் விளக்கி நெருக்கடிக்கு ஒரு முடிவு தேட இங்குமங்குமாக அலைந்துகொண்டிருந்த நண்பர் மதியழகனும், டி. எம். பார்த்தசாரதியும் வந்தனர். நாங்கள் எல்லாம் கூடிக்கிடந்த கூடத்தைத் தாண்டி அண்ணா இருந்த அறைக்குள் சென்றனர். திருச்சி சாம்பு, அண்ணாவின் நெருங்கிய நண்பர். அவரும் கொஞ்சநேரத்துக்கு முன்தான் வந்திருந்தார். இருந்த நிலையைக் கண்ட அவரால், எதுவுமே பேச இயலவில்லை. அவர் அண்ணன் சங்கரன் அவர்கள் இறந்தபோது, எப்படி வேதனைத்தோற்றம் பெற்ருரோ, அப்படியிருந்தார்.

"மதி! நான் திடமான முடிவுக்கு வந்துவிட்டேன். இந்த நிலைமைகளைத் தாங்கக்கூடிய மனநிலை எனக்கில்லை. அங்கே சம்பத் சாப்பிடாமல்கிடக்கிருன் என்பதை நினைக்கவே, என்ஞல் முடியவில்லை. இந்த நிலையில் நேற்று இரவு, கருணாநிதி உருக்கமாக எழுதி, தன் பதவி விலகல் கடிதத்தை அனுப்பியிருக்கிருன். படிக்கவே என்ஞல் முடியவில்லை. இதற்கா, நான் இத்தனை நாளும் உங்களுக்கெல்லாம் அண்ணனுக இருந்தேன்? நான் ஒருவன் பொறுப்பில் இருப்பதால் தானே, எல்லோரும் என்னை இச்சங்கடத்தில் வைக்கின்றனர். இந்தப் பொறுப்பிலிருந்து விடுவித்துக்கொண்டால்?—சாதாரணத் தொண்டனைப்போல், நீங்கள் சொல்கிற வேலையைச் செய்துகொண்டு இருந்துவிட்டால்? என்கிற, முடிவுக்கு வந்துவிட்டேன். என் மனம், இனி மேலும் தாங்காதப்பா! இதோ, என் விலகல் கடிதத்தைத் தயாராக வைத்திருக்கிறேன்," என்று அண்ணா சொன்னதுதான், தாமதம், மதி ஓ வென்று கதறிவிட்டார். ஓடோடியும் காலைப்பிடித்தபடி, "அண்ணா! இப்படி ஒரு முடிவெடுத்து, ஏற்கனவே கலங்கிக்கொண்டிருக்கிற, கழகத் தோழர்களை எரிமலையாக்கி விடாதீர்கள். நீங்கள் ராஜினுமா செய்துவிட்டதாகத் தெரிந்தால், என்னென்ன ஏற்படுமோ, சொல்லமுடியாதண்ணா, சொல்ல முடியாது. ஒரே ஒரு மணி நேரம்! சம்பத்துக்கு, தான் விரும்பும் மாறுதல், நாளையதினம் கூடும் காவலர் கூட்டத்தில் கிடைத்தால் போதும். அவர் உண்ணா நோன்பை நிச்சயம் முடித்துவிடுவார். தங்களது முடிவை அவரிடம் சொன்ஞல் போதும். அவரும் துடிதுடித்துப் போவார்" என்று சொல்லி, மதி கதறியதை, என் வாழ்நாளிலேயே மறக்கமாட்டேன்! எப்பொழுதும் எதையும் அமைதியோடு சிந்திக்கும் ஆற்றல் படைத்தவர், மதியழகன்! நாளைக்கு என்ன நடக்கும் என்பதை யோசித்துப்பார்த்து முடிவெடுக்கும் திறன் படைத்த மதியூகி! சொந்த அண்ணனை எப்படியொரு தம்பி கெஞ்சுவானே, அதேபோல், கெஞ்சினுர். மதி மட்டும், நிலைமையை உணராமல், உணர்ச்சிக்கு ஆளாகியிருப்பாரானுல் தமிழ்நாடு அன்று நிச்சயம் "பல நிகழ்ச்சி"களைக் கண்டிருக்கும். எந்த வன்முறையை நாம் எல்லாம் விரும்பவில்லையோ அந்த வன்முறைகள் உணர்ச்சிக் கூத்தின் காரணமாக ஏற்பட்டிருந்தாலும் ஏற்பட்டிருக்கும்.

அண்ணாவின் சாப்பிடாத நிலையும், வேதனையின் விளைவால் வேறுவழியில்லையென்று விரக்தியடைந்துவிட்டார் என்கிறசேதியும் எப்படியோ தெரியவே, பதறித் துடித்துக்கொண்டு பறந்து வந்தார் கருணாநிதி. இதற்கொரு முடிவில்லையா? ஏக்கமும் துக்கமும் தானு. இத்தனை நாளும் நாம் பட்டதற்கு பலன்! என்று குமுறி நின்ருர் முல்லை சத்தி. டி. வி. நாராயணசாமியும், எம். ஜி. ஆர். அவர்களும் வேதனையோடு வந்து அமர்ந்தனர். அவர்கள் எல்லோருடையமுகமும் காட்டியது, எத்தகைய வேதனையை இரண்டு நாட்களாக அனுபவித்துக்கொண்டிருக்கிருர்கள் என்பதை, "எம். ஜி. ஆரை இப்படியொரு நிலையில் பார்க்க என்ஞல் முடியவில்லை, அரங்கண்ணல்! முதலில் அவரை வீட்டில்போய்ச் சாப்பிடச் சொல்," என்ருர், அண்ணா. அவரிடம் சொன்ஞலோ, "முதலில் அண்ணாவைச் சாப்பிடச் சொல்லுங்கள்" என்ருர். நாங்கள் அனைவருமே, அண்ணா சாப்பிடாதவரையில் சாப்பிடுவதில்லை என்றிருக்கிற செய்தி அண்ணாவுக்குத் தெரியவரவே, மாலை மணி நாலுக்கு, ஓட்டலிலிருந்து வந்த சிற்றுண்டியை தோழர் சி. எஸ். சுந்தரேசன் எடுத்து வைக்க, எங்களுடன் உட்கார்ந்து இரண்டு கவளம் எடுத்துவைத்தார், அண்ணா. இருள் அகலும், என்கிற நம்பிக்கை தென்பட்டது. அதே சமயம்தான் சம்பத்தின் உடல் நிலை சரியாக இல்லையென்று டெலிபோன் வந்தது. பதறினுர் அண்ணா! அவசர அவசரமாக ஓடோடியும் சென்ருர். 'என் பேச்சைக் கேட்டு உண்ணா நோன்பை நீ விடக்கூடாதா, சம்பத்? என்று உருக்கத்தோடு, கேட்டார். சம்பத்தும், "உங்களைவிட எனக்கு யாரண்ணா? என் எண்ணம் வெற்றிபெற்ருல் சரி!" என்று, மூன்று நாட்களாக உடலை வருத்தி மேற்கொண்ட உண்ணா நோன்பினை முடித்துக்கொண்டார். களிப்பு மலர்ந்தது, அண்ணாவின் முகத்தில்! காலையில் ஏற்பட்ட சோகம், மாலையில் மறைந்தது!! ஆனுலும், நாளைக்குக் (26-ந் தேதி) கழகக் காவலர் கூட்டத்தில் என்னென்ன ஏற்படுமோ, அண்ணாவின் விருப்பை அனுசரித்து நடப்பரோ, அல்லது ஆத்திரத்தால் தாக்குண்டு கிடப்போர் எப்படியெல்லாம் கொதிப்பரோ என்கிற கலக்கம் தீராமலில்லை. வந்துகொண்டிருந்த தந்திகளும், எட்டிக்கொண்டிருந்த செய்திகளும், குடும்பத்திலிருந்து ஒரு சிலர் போனுலும் பரவாயில்லை என்பதுபோல இருந்தது. இந்தச் சூழ்நிலையில், அன்றைய இரவும், தூக்கமில்லாமலேயே கழிந்தது!

விடிந்து பார்த்தால் நாடெங்குமிருந்து காவலர் பலரும் வரலாயினர். அவர்களைக் கண்டால், கனல்தெறித்தது, பலர் கண்களில்! மூன்று நான்கு கார்கள்—இருநூறுக்கு மேற்பட்ட கிளைக்கழக காவலர்கள்—முன்னேடியாகத் திருச்சி மணி, ராபி, ஷரீப், நெடுமாறன், தில்லையிலிருந்து பெரியதொரு வானில்—வில்லாளனும் வி. வி. சாமிநாதனும், பொன் சொக்கலிங்கமும். பாலகுருசாமியும் தோழர்களும். மதுரை டாக்டர் அருணுசலமும். துரையரசும். தஞ்சை மாவட்டத் தளபதி மன்னை 'மாமா' நாராயணசாமியும், கோசிமணியும், குடவாசல் கிருட்டினமூர்த்தியும். இப்படி யாராருக்கு அண்ணா தங்கியிருந்த, டபிள்யூ. கே. தேவராசன் அவர்களது இல்லத்து முகவரி கிடைத்ததோ, அவர்கள் எல்லாம் வந்தனர். வரும்போதே ஒவ்வொருவரிடத்திலும் கண்ணீர்! அண்ணாவைக் கண்டதும் அந்தக் கண்ணீர் அருவியாயிற்று!!

## கண்ணீர் விட்டே வளர்ந்தோம்-இதைக் கருக்கிடவா துணிவோம்?

வந்த ஒவ்வொருவரையும் தனித்தனியே அழைத்து, அவரவர்கள் கருத்தை அறியலானுர், அண்ணா. பல எரிமலைகள் வந்துள்ளதைக் கண்டார்! ஒன்றும் புரியாத நிலையில், கழகம் உதிர்ந்த மணித்துளிகளாகுமோ அல்லது ஒற்றுமை மாலையாக விளங்குமோ என்கிற அச்சமும் அயர்வும் துளைக்க, கிளம்பினேம், திருவொற்றியூர். ஒரே நாளைக்குள் எப்படித்தான் தோழர்கள் ஊரை அலங்கரித்தனரோ! விழாக்கோலம் கொண்டிருந்தாலும், கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான தோழர்களின் உள்ளங்களிலே களிப்பு இல்லை—கலவரமே, இருந்தது!! காவலர் கூட்டம் நடைபெற்ற இடத்துக்குள், அண்ணா நுழைந்ததும், "வாழ்க, அண்ணா!"

(8-ம் பக்கம் பார்க்க)



# கொள்கை வளர்ச்சியின் அறிகுறி பாரீர்! குவியுது தேர்தல் நிதி காணீர்!!



. தோழர் ஏ. பி. சனார்த்தனத்தை அழைத்து, மிகமிகச் சிறப்பாகப் பொதுக் கூட்டம் நடத்தியாகி விட்டது! சென்னையிலிருந்து வந்தவரை, திருவாரூரிலிருந்து அனுப்பியாக வேண்டும்!. இரயில் செலவுக்குப் பணம் கொடுக்கவோ, வழியில்லை. ஒரு ரூபாயா, இரண்டு ரூபாயா, மொத்தம் பதினைந்து ரூபாய்கள் வேண்டும். கடன் கேட்டு இவ்வளவு பெரிய தொகையை வாங்கலாமென்றால் நம்பிக் கொடுக்க ஆளில்லை. நண்பர் 'ராயல் சோடா' கம்பெனி விசயராகவனி (இப்போது, டாக்டர்!) டம் எப்படியாவது ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் கடன் வாங்கிவிடலாம். மீதிப் பணத்துக்கு எங்கே போவது? மாணவர் தலைவராயிருந்த தோழர் கருணாநிதி விழித்தார்; திகைத்தார். தென்னன் என்று ஒரு நண்பர்! அவருடைய மூளை இது போன்ற சமயங்களில் வெகு வேகமாக வேலை செய்யும். கருணாநிதியின் காதில் இரகசியமாக ஏதோ சொன்னார். "எப்படி சனார்த்தனத்தை ரயில் ஏற்றி அனுப்புவது?", என்கிற ஆழ்ந்த யோசனையில் கிடந்த எங்களைவிட்டு, உடனே வருவதாகக் கருணாநிதி போனார். திரும்பி வந்தபோது அவர் கையில், அவரது திருமணம், நடந்தபோது, ஒருவர் வழங்கிய வெள்ளிக் கோப்பை இருந்தது. தென்னன் கைக்கு அது மாறிய சிறிது நேரத்தில், இருபது ரூபாய் வந்தது. சீரும் சிறப்புடன், கூட்டத்துக்கு வந்த தலைவரை, ரயிலேற்றி வழியனுப்பிவிட்டு, 'குஷி'யாக நாங்கள் எல்லாம், காபி சாப்பிட்டுவிட்டு (மீதி ரூபாய் ஐந்து இருந்ததே!!!) ஆனந்தத்தோடு திரும்பிய அந்த நாள் எங்கே! இன்று அதே ஆரூரில் எவ்விதச் சிரமமுமின்றி ரூபாய் 1600ஐ வசூல் செய்து கழகத்தின் தேர்தல் நிதிக்கென ரூ 11-ஐ வழங்கிடும் புது நிலைமை எங்கே!!-என்று எண்ணும் போது, எவருடைய உள்ளமும் பூரிக்காமலிருக்காது. ஆரூர்ப் பொருளாளர் அன்பர் ஜமால் சொல்கிறார், "இன்னும் நாங்கள் தேர்தல் நிதிக்குப் பணம் தருவோம்" என்று. எங்களூர் சிறு கிராமம் இருந்தாலும் நாங்கள் 500 கொடுத்தோம் என்கிறார், வெங்கிடங்கால் சந்தானம். அவர் மைத்துனர் இராசகோபால் என் பங்கு பாக்கியிருக்கிறது. இப்போதல்ல; பிறகு! என்கிறார். குருவிக்கரம்பைக் கிருட்டினமூர்த்தியோ பட்டுக்கோட்டை வட்டத்தின் சார்பாக ரூபாய் 5555 கொடுத்தோம் பிறகு கணக்குப் பார்த்தபோது மேலும் ரூபாய் 1500 மிச்சமிருப்பது தெரிந்தது அடுத்த தவணையின்போது இன்னும் அதிகம் கொடுக்கவிருக்கிறோம் என்று அன்பர் அடைக்கலமும் ஆர்வமுள்ள புது முகங்களும் வெற்றிக் கண் சிமிட்ட வெளியிடுகிறார்! தஞ்சை பெத்தண்ணனும் நடராசும், பட்டும், கவுன்சிலர்களுமோ, "கண்டீரோ! ஒரு சிறப்புக் கூட்டம் அதன் மூலம் 6000 ரூபாய் கொடுத்தோம்" என்று அகமகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றனர்.

மாயவரம் கோ. சி. மணியோ 'என்ன செய்வோம் எங்களால் முடிந்தது இவ்வளவுதான்!" என்று பெரு மூச்சுடன் பேசிக்கொண்டே இதோ இருக்கிறது ரூபாய் 4000 என்கிறார்! திருத்துறைப்பூண்டி நான் படித்த ஊர். கழகங்கள் அமைக்க எங்கெங்கே சென்றோம் என்னென்ன பாடு பட்டோம் என்கிற பசுமையான நினைவுகள் இப்போதும் வருகின்றன. அங்கே, கால் லட்சத்துக்குமேல் மக்கள் குழுமினராம்! வட்டச் செயலாளர் தர்மலிங்கம் வழங்கினாராம் ரூபாய் இரண்டாயிரம்!! காரைக்கால் இன்னும் பிரெஞ்சு நாகரீகத்தை இழக்காத சிற்றூர். அங்கே கழகம் வளர்த்துப் பாடுபடும் வட்டச் செயலாளர் சி. சே. சேவியர், ரூபாய் 700 கொடுத்திருக்கிறார். "உங்களுக்கெல்லாம் நாங்கள் என்ன மட்டமோ? எங்கள்




கே. கே. என். மட்டும் உடல் நலத்தோடு இருந்திருந்தால் அப்போது தெரியும். ஆனாலும் எம்பங்கு இதோ!" என்று குடந்தை வட்டத்தின் சார்பில் 4000 ரூபாயை வட்டச் செயலாளர் தோழர் பத்மநாபன் அளித்திருக்கிறார்!! பாபநாச வட்டம் பாக்கி பிறகு! இதோ 2000 என்று வலங்கிமான் சாமிநாதன் வழங்கியிருக்கிறார். நன்னிலம் வட்டச் சார்பில் 3700 ஐத் தந்துமுறுவல் பூத்து நிற்கும் கொரடாச்சேரி நடராசன், என் நெருங்கிய தம்பி நெஞ்சு நிமிர்கிறார்!

தஞ்சைத் தரணியை பார்த்தீரா மருகரே? "என்று, நாங்கள் எல்லாம் ஒருகாலத்தில் சகவாசி என்று செய்த கேலிக்குப்பழிவாங்கும் பான்மைபோல பம்பரம் போல் பணியாற்றும் மன்னார்குடி 'மாமா' நாராயணசாமி என்னைப் பார்த்துக் கேட்கிறார். எனக்கும் அவருக்கும் நிதி சேர்ப்பு பற்றி ஒரு பந்தயம் கூட இருந்தது. பந்தயத்தில் நான் தோற்றேன்! ஏனெனில் எனக்கு இவ்வளவு பணம் சேருமா என்று அண்ணாவைப் போல் ஒரு சந்தேகம். ஆனால் மன்னையார் சவால்விட்டார்! நான்கே நான்கு தாலூகாக்கள் ரூபாய் 30000 வழங்கியிருக்கின்றன!!

தஞ்சை மாவட்டம் மட்டுமல்ல கடந்த இரு திங்களிலே வடாற்காடு தொடங்கி வைத்து மதுரையும் இராமநாதபுரமும் நாஞ்சிலும் முன்பகுதியாக வழங்கியதையும் சேர்த்து கிட்டதட்ட லட்ச ரூபாய் நிதியை அளித்திருக்கின்றன, கழகத்துக்கு. ஏனைய மாவட்டக் கழகச் செயலாளர்களும், எம் பங்கு என்ன சாதாரணமோ, பார்க்கப் போகின்றீர் பாரீர் என்று பரபரப்பு காட்டுகின்றனர். சென்னை மாவட்ட மணிவண்ணன், எதையும் வாயில் சொல்லமாட்டார்; செயலால் முடிப்பவர். அவர் மௌனமாகயிருந்து கொண்டே, நிதி சேர்க்கும் வேலைகளைச் செய்து வருகிறார். செங்கற்பட்டு சி. வி. எம்., அவர்களோ, அமைச்சர் பக்தவத்சலத்தை எதிர்த்துப் போட்டியிட்டு இன்னும் ஈராயிரம் ஓட்டு வாங்கியிருந்தால் என்ன ஆகியிருப்பார் அமைச்சர்?" என்று இன்னும் சொல்கிறவர். மாவட்ட முழுவதிலும், உற்சாகத்தையும் உணர்ச்சியையும் தூண்டிவிட்டு தன் கோட்டாவை முடிக்க முயன்று வருகிறார். எனக்கு நன்றாகக் கவனமிருக்கிறது! கழக நிதிக்கு என்று ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒவ்வொரு மாவட்டமும், ரூபாய் இரண்டாயிரம் நிதிதரவேண்டுமென்று சொன்னபோது, "அய்யய்யோ! ஏ அப்பா! இரண்டாயிரமா? எப்படி முடியும் என் மாவட்டத்தில்" என்று பொதுக்குழு கூட்டத்தில், அலறியவர் அண்ணாமலை. அந்த நாள் எங்கே! இப்போது இரண்டாயிரத்தைப்போல் இருபது மடங்கு பணம் கொடுக்கமுடியுமா எண்றெண்ணும் இந்தநாள் எங்கே!! கழகம் துவக்கியபோது கழக நிதிக்கென முதன் முதலாக நடிப்பிசைப்புலவரின் குழுத்தோழர்களோடு அறிஞர் அண்ணாவும் 'திராவிடநாடு' பணிமனைத் தோழர்களுமாக, தூத்துக்குடியிலும் விருதுநகரிலும் 'சந்திரமோகன்' 'நீதிதேவன் மயக்கம்' நாடகங்களை நடத்தி சுமார் ஒன்பதாயிரம் ரூபாய்களைக் கண்டபோது, பெரு வியப்பு பெற்று, அதைப் பற்றியே ஓரிரு மாதங்கள் பெருமையுடன், பேசிக்கொண்டிருந்திருக்கிறோம். இப்போது, நாடகங்கள் மூலமல்ல சிறப்புக் கூட்டம் ஒன்றிலேயே அந்தத் தொகையைக் காண முடிகிறது. கருணாநிதி பொருளாளராக வந்ததும், ஏடுகளில் ஆயிரம், நூறு என்று அறிவித்து வழங்குவது ரூபாய்களையல்ல, புதுக் காசுகளை!! ஆனால், காங்கிரசுக்கு, ஆயிரம், பத்தாயிரம், லட்சம் என் [illegible] வழங்கக் கூடிய [illegible] இருக்கிறார்க[illegible] கோடிகளிலே [illegible] குபேரக் கம்பெனிகள் தமது காங்கிரஸ் நிதிக்கு, குற்றம் புரிவோரும் எத்திப் பிழைப்போரும், கொள்ளை இலாபம் அடிப்போரும், குபேரர் எனச் சொல்லித் திரிவோரும் கொட்டிக் கொட்டிக் கொடுக்கிறார்கள். காங்கிரசை நம்பி சீமான்களும், சீமான்களை நம்பியே காங்கிரசும் வாழவேண்டிய நிலை, இன்று. ஆனால். கழகம்? அப்படியா!! அல்ல, அல்ல.

இங்கே, சீமான்களில்லை!

## தணலில் தங்கம் நம் கழகம்—இதைத் தாழ்த்திட நினைப்பரோ, தாயக மக்கள்?

இந்தப்பக்கமிருப்பது போன்ற அறிவிப்புகள், படங்களுடன் தினசரி வந்துகொண்டிருக்கின்றன. இதைக் கண்டு, ஒவ்வொரு தோழரும் தோழியரும், தத்தமது சக்திக்கேற்ற வகையில் ஒரு ரூபாய் இரண்டு ரூபாயென்று, தலைமைக் கழகத் கணக் கேட்டிலேயே காங்கிரஸ் கட்சிக்கு என்று தனிப்பேரேடு போட்டு பணத்தை அள்ளிக் கொடுப்பதையும், இப்படி அரசியல் கட்சிகளைக் கம்பெனிகளும் ஆலைக படியாத தலைக்குச் சீப்பு வாங்கவும் வக்கற்ற ஏழைகள் இருக்கிறார்கள்! ஆலையரசர்கள் இல்லை! அந்த ஆலைகளிலே, கரும்புச் சக்கையாய் உடலைப்பிழிந்து உழைப்போர் உண்டு! நில முதலைகள் இல்லை! அந்த முதலைகளின்

### கழகப் பணியே நம் வேலை—காணிக்கை ஆக்குவோம், நம் மூச்சை!!

துக்கு நேரிடையாகப் பணம் அனுப்பி வருகின்றனர்.

தொகை சேர்ந்துள்ளது, இலட்சத்தை எட்டுகிறது என்றால், அத்தனையும் பத்தாயிரம் இருபதாயிரம்என்று சேர்த்தது அல்ல! எம் ஜி. ஆர்.—ஐயாயிரம் தந்தார். காட்டூர் இரா ளும் ஆட்டிப்படைத் தலாகாது' எனும் பொரு[illegible] பார்லிமெ[illegible] சட்டம் ஒன்[illegible]ண்டு [illegible] எழுப் பியதையும், அதனை மூடி மறைத்து காங் மூர்க்கப்பிடியினின்றும் எப்படித் தப்புவோம் என்று ஏங்கிடும் ஏழைகள் இருக்கிறார்கள்! ஷெல்லி ஆவேசத்துடன் பாடினான், "அவர்கள் சிலர் நாம் பலர்," என்று. அந்தக் காட்சியினையே, இன்று நாடும் நாமும் காண்கிறோம். அவர்கள் சிலர்

### பொற்காலமெனும் பூமலர, புறப்படுவீர்-என் சகோதரர்காள்!!

மையா எனும் இனிய நண்பர் ஓராயிரம் அளித்தார். இதைத் தவிர, ஏனைய தொகையெல்லாம், மக்கள் அளித்ததாகும். இலட்ச ரூபாயை நெருங்குகிறது! அவ்வளவு பெரிய தொகையை, மாவட்ட வாரியாக மக்கள் அளித்திருக்கின்றனர் எண்றெண்ணும் போது, அந்தச் சாதனையின் பெரும் பங்குக்கு உரியவர்கள் கழகக் காளையரும், அவர்களுக்கெல்லாம் ஊக்கமூட்டும் பொருளாளரும் காரணம்என்றாலும், நிதியைத் தந்திருப்பது யார்? மக்கள்! கழக மக்கள்!!— இந்த உண்மையின் வலிவையும், பொருளையும் நாம் மட்டுமல்ல, மாற்றுக் கட்சியினரும், நிச்சயம் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

காங்கிரஸ்கட்சி நம்மைப் போல மக்களை எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இல்லை. நம்முடைய கழகப் பொதுக் கூட்டங்களில், ஆர்வமுள்ள தோழர்கள், கிரஸ் பெரியவர்கள் மூலைக்கு அனுப்பியதையும் நாடுஅறியும். பலகோடி ரூபாய்களை ஏப்பம்விட்ட "முந்திரா" போன்ற மோசடிக்காரர்கள் கூட, காங்கிரஸ் நிதிக்கு அளித்த கணக்கற்ற இலட்சங்களை பற்றி வழக்கு [illegible]றங்களில் வந்த விபரங்கள் மூலம் நாமறிவோம்! தான்! ஆனாலும் சகலதையும் ஆட்டிப்படைக்கும் சக்தியாக விளங்கும் பணம், அவர்கள் கையிலே இருக்கிறது. ஜனநாயகத்தை இன்றைய தினம் வெட்டும் கோடரியாக விளங்குகிறது பணநாயகம். தேர்தல் என்றால், ஓட்டுச்சீட்டுகளைக் காசுகொடுத்தே வாங்கிட நினைப்போருண்டு. அவர்கள், நம்மிடம் கிடையாது! ஒவ்வொரு ஊருக்கும் சென்று பிரச்னைகளை விளக்குவதற்கு வேண்டியபிரச்சாரசாதனங்கள், சுவரொட்டிகள், இவைகளுக்காகத்தான் நமக்கு நிதி தேவைப் படுகிறது.!! இருபது மைல் முப்பது மைல் என்றிருக்கும் எல்லாக் கிராமங்களுக்கும் ஒரு ஏழெட்டுநாட்களுக்குள் சென்று, கொள்கையை விளக்கி, குடும்பத் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு. தேர்தலன்று ஓட்டுச்சாவடிக்கு வாக்காளர்கள் வருமாறு செய்து அதற்கென வேலை வெட்டி



களை விட்டுவந்து உழைக்கும் தோழர்களுக்கு வயிறார இல்லாவிடினும், வாயாராவது சோறு போட்டு சகல காரியங்களையும் கவனிக்க குறைந்த பட்சம் ஐந்து லட்சமாவது இல்லையென்றால், கடினமே. ஆனால், ஐந்து லட்சம் என்பதை நாம் எழுத்தில் கண்டிருக்கிறோமே ஒழிய, கண்ணால் பார்த்தது கிடையாது!! ஒருசில திங்களுக்கு முன்பு, கழகத்துக்கெனச் சென்னை சேத்துப்பட்டு அருகில் வாங்கப்பட்டிருந்த காலிமனையை நல்ல இலாபத்துக்கு விற்று, அந்தப் பணத்தோடு வந்தார், நம்முடைய முன்னாள் பொதுச்செயலாளரான நெடுஞ்செழியன். அவர் கொண்டு வந்திருந்த பணத்தில் பத்தாயிரம் ரூபாய்நோட்டு ஒன்று இருந்தது. "பத்தாயிரம் ரூபாய் நோட்டை இதுநாள் வரை நான்பார்த்தது கிடையாது" என்று சொல்லி அந்த நோட்டை வாங்கி அண்ணா வியப்புடன் பார்த்தார். ஆனால், காங்கிரஸ் தலைவர் சஞ்சீவரெட்டியார் நிலை அதுவா? இல்லை! கண் சிமிட்டுமுன், எத்தனையோ பத்தாயிரம் ரூபாய் நோட்டுகள் அவர் பாதங்களில் வந்து விழும்! ஏனெனில் காங்கிரஸ் இன்று ஆளுங்கட்சி. அதனால் அதன் பரிவையும் பாசத்தையும் பெற சீமான்கள் சிந்து பாடுகின்றனர், கேளாமலே கொண்டுபோய் நிதி கொடுக்கின்றனர்!! இந்தக் கலையில் பிறமாநிலங்களிலேயிருப்பவர்களைவிட, மிகமிகக் கெட்டிக்காரர் காமராசர். இப்போது முதலே, யாரரரை எங்கெங்கே நிறுத்தலாம், ஏவரெவரால் எவ்வளவு பணம் செலவழிக்க முடியும் எப்படியெப்படித் தேர்தலுக்குப் பணத்தைக் குவிக்க முடியும் என்று, அவர் வேலை செய்ய ஆரம்பித்து விட்டதாக, அவருடைய வட்டாரத்திலிருந்து செய்திகள் வருகின்றன. ஆஸ்கார்வயில்டு எனும் கதை மன்னன் அருமையாக குறிப்பிடுகிறான்,

"Every man of ambition has to fight his century with its own weapons. What this century worships is wealth. The God of this century is wealth. To succeed, One must have wealth"

என்பதாக. ஒவ்வொரு நூற்றாண்டிலும், வெல்லக்கூடிய சக்தி என்று ஒன்றுண்டு. அன்பு மார்க்கம், மதவழி, தத்துவப் போட்டி, வேதாந்த விளக்கம், கவிதை தீட்டுதல், இப்படியாக! ஒவ்வொரு நூற்றாண்டிலும், இதுதான் பெரிய சக்தி என்று கருதக்கூடிய கட்டத்தில் ஒவ்வொரு பாதைகள் இருந்திருக்கின்றன. இந்த நூற்றாண்டிலே, எதையும் சாதிக்கக்கூடிய சக்தி என்கிற பெருமையை பணம் அடைந்திருக்கிறது! இந்தப் பணத்துக்கு இருக்கும் சக்தியை செல்லாக்காசாக்கி, "உழைப்பேசெல்வம் உழைப்புக்கேற்ற வாழ்வும் வளமும் வேண்டும்," என்கிற புதுயுகத்தை உருவாக்கப போராடுகிறவர்கள் நாம் என்பதில், ஐயமில்லை. எல்லாம் வல்ல பணமே பிரதானம் என்று பண ஒலி கேட்டு, பல்லிளித்துப் போகிறவர்களும் நாமல்ல. பணமே கடவுள் என்று பிறர் கருதி வாழ்ந்தாலும், அதனை ஒரு சாதனம் என்கிற அளவில் மதித்திடும் தன்மை பெற்றவர்கள் தான், நாம். இருந்தாலும் இலட்சிய வெற்றியினையடைய நாம் செல்லவேண்டிய பாதையினைச் செப்பனிட, பணமும் வேண்டும். அதை மறுப்பதற்கில்லை. அந்தப் பணத்தை நாம் எப்படித் தேடுவது?—என்று ஏங்கிய காலம் இருந்தது! அப்போது ஊருக்கு ஒருவர், இருவர் என்றுதான் நாமிருந்தோம். இப்போதோ, எங்கெங்கு சென்றிடினும் கழகத்துக்குப் பேராதரவையும் அன்பையும் காண்கிறோம். அப்படி அன்பு செலுத்துவோர் யாரெனில், பொதுமக்களான ஏழைகள்தான். அந்தப் பொது மக்கள் வழங்கும் அரையணாவும் ஓரணாவும் சேர்ந்து, ஒரு இலட்




சத்தை எட்டுகிறது, நம்முடைய தேர்தல் நிதி! அதில் ரூபாய் எண்பதாயிரத்தை, இராயபுரம் இந்தியன் பாங்கியில் 'நிரந்தர டிபாசிட்'டாக்கி, சேதியினைப் பொதுச்செயலாளரும், ஏனைய செயலாளர்களும் மகிழும் விதத்தில் அறிவித்திருக்கிறார், பொருளாளர் கருணாநிதி!

அந்த அகமகிழும் காட்சியினையே. ஓவியரும், நமது அறப்போரின்' முதல் அட்டைப் படமாக, தீட்டியிருக்கிறார்.

இலட்சம், இன்னும் வளர வேண்டும் என்பதில், இராமநாதபுர மாவட்டச் செயலாளர் தென்னரசுவும், கோவை மாவட்டச் செயலாளர் உடுமலை நாராயணனும், சேலம் செயலாளர் செயல்வலார் குப்புசாமியும் திருச்சி அம்பில்தர்மலிங்கமும் தென்னாற்காடு சாம்பசிவமும், நெல்லை சிவசாமியும், நாஞ்சில் பி. எம். கண்ணுவும் காட்டிவருகின்றனர் அக்கரை. சீக்கிரம் எல்லா மாவட்டங்களும், சிந்துபாடுமென நம்புகிறோம்! நம் சிந்தையை குளிர்விக்குமென எதிர்பார்க்கிறோம்!! நெல்மணிகள் வாட, கடலில் போய் மழை பெய்யும் மேகம் போன்ற சீமான்களின் செல்லரித்த நோட்டினைவிட, அகமும் முகமும் களிக்க 'அண்ணா இந்தா! தம்பி இந்தா!' என்று ஏழைஎளியவர்கள் வழங்கும் சிறு சிறு தொகையே, நமக்குத் தேனமிர்தம் - திரவியம் - தேடக் கிடைக்காத செல்வமாகும்! அந்தச் செல்வத்தைப் பெறுவோம்—அடக்குமுறை ஆட்சிககு அடிப்போம் சாவுமணி!!

———

* * * *

### வளர்க!

'அறப்போர்' எனும் பெயர் கொண்டுதுவங்கும் உங்கள் ஏடு நல்ல முறையில், வளர்ந்து, நாட்டுக்குப்பாடுபட வேண்டும் என்று விழைவதோடு என் நல்லெண்ணப் பங்காக இந்த ரூ. 25ஐயும் அனுப்பியுள்ளேன்.

கோ. இராமகிருட்டினன்
பஞ்சாயத்துத் தலைவர்
வேளூர் (திருத்துறைப்பூண்டி)
20—2—61

* * * *

"நானும் நீங்களும் பழகிய நினைவுகள் வருகின்றன. உங்கள் உள்ளம்போல் 'அறப்போர்' வெல்லட்டும். மாணவப் பருவமுதல், கொள்கை வெறி கொண்டுலவும், உங்கள் எந்த முயற்சியையும் வாழ்த்தும் நான் இந்த முயற்சியையும் வரவேற்கின்றேன். வாழ்க! வாழ்க!

[A. P. சனார்த்தனம் M.A.
வழிநிலை : பட்டுக்கோட்டை
24—2—61

* * * *

தங்களை ஆசிரியராகக்கொண்டுவர இருக்கும் ',அறப்போர்" கிழமை ஏட்டின் மூலம் நாட்டில் நிலவிவரும். அறியாமை—அழிவு மனப்பான்மை, எத்தர்களின் அரசியல் பித்தலாட்டம் ஆகியவைகளைக் களைந்தெறிய, தயைதாட்சண்யமின்றிநற்பணி ஆற்றி, நாடு மீளவும், நமது நாட்டவருக்கு நல்வாழ்வு கிடைக்கவும், அறப்போர் பணி பல ஆற்றி பண்புடன் பீடுநடைபோட்டு ஏற்றம் கண்டு, நிலைத்து நீடுவாழ விழைக்கிறேன்,

வணக்கம்
அன்பன்,
சி. வி எம். அண்ணாமலை
காஞ்சீபுரம்

( 5-ம் பக்கத் தொடர்ச்சி )



என்கிற முழக்கம் எழுந்தது. அண்ணா எழுந்து நிலைமைகளை விளக்கினார். அத்துடன் உணவுக்காகக் கலைந்தோம். உண்ட பின்னர், ஒருவரையொருவர் சந்தித்தபோதும், மனமலர்ச்சி ஏற்படும் என்கிற மார்க்கம் தென்படவில்லை. எங்கு போனாலும், ஆத்திரமும் அதிருப்தியுமே இருந்தது! என் தோழர் கண்ணதாசன் என்ன செய்தாலும், அவருக்கு ஒரு தனி இடம் என் இருதயத்திலுண்டு. அவர் வேட்டியை நான் உடுத்துக்கொண்டதும், என் பையில் உரிமையோடு கைபோட்டு அவர் பணம் எடுத்துக்கொள்வதையும், நாங்கள் இருவருமே சேர்ந்து கருணாநிதியின் வீட்டுக்குப் போனதையும், மூவருமாக உலா வந்த அந்தக் களங்கமற்ற காலத்தையும் எப்படி மறக்கமுடியும்? சாப்பிடும்போது கண்ணதாசனைப் பார்த்தேன்! ஏனோ, என்னால், அவரிடம் சரியாகப் பேசவே முடியவில்லை!!

மீண்டும் பிற்பகலில் காவலர் கூட்டம் கூடியதும், அண்ணா, நிலைமைகளை விளக்கிப்பேசினார். "கண்ணீருடன் பிறந்தோம்! இப்பொழுதும் கண்ணீரையே ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்கிறோம்!!" என்று மனமுருகிய நிலையில் ஆரம்பித்து, அவர் பேசப் பேச, எரிமலைகளானோர் குளிர் நிலவாயினர். நாம் பெற்றிருந்த குடும்பப் பாசம் எங்கே? என்று, அண்ணா கேட்டபோது, அடடா, சில்லரை நினைப்பால் எவ்வளவு பெரிய சிறப்பான தோழமையைக் கொட்டிக் கவிழ்த்துவிட இருந்தோம் என்று தெளிந்தனர். "நீங்களெல்லாம் ஒற்றுமையாயிருந்து என்னை அண்ணன் என்று சொல்வதைக் கேட்பதுதான் எனக்குப் பெருமை. இந்தப் பாசம் அறுந்திடும் அறிகுறி தென்படுகிறதென்று தெரிந்தால், பிறகு நீங்கள் இந்த அண்ணாதுரையை……" என்று சொல்லிக் கொண்டே வந்த அண்ணாவால் பேசமுடியவில்லை…. "இந்த அண்ணாதுரையை, உயிரோடு நீங்கள் பார்க்க முடியாது" என்று சொன்னதுதான் தாமதம், அய்யகோ, என்று அலறியது காவலர் கூட்டம்! தலை தலையென அடித்துக் கொண்டார், கலங்காத நெஞ்சமும், அடுத்த அழகிரியென நானெல்லாம் நினைக்கும் அண்ணன் காஞ்சி கலியாணசுந்தரம்! அவர் கோவெனக் கதறியது போலவே, காவலர் கூட்டமும், அண்ணா, அண்ணா, என்று அழுதது. எங்கே காண முடியும் இந்தப் பாசத்தை? எந்தக் கட்சியில் தென்பட முடியும் இந்தப் பந்தம்? இந்த உலகில் எங்கே நிலவ முடியும் இந்த அன்புத் தொடர்பு?

அண்ணாவின் உருக்கமான உரை கேட்ட, காவலர்கள், கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தனர். அண்ணா சொன்னார், "நான், உங்களுக்கெல்லாம் தலைவனல்ல; அண்ணன். புகழால் கட்சி நிறுவியோருண்டு. பணபலத்தால் கட்சி நடத்துவோருண்டு. அறிவால், இயக்கங்கள் அமைப்போருண்டு. நான் உங்களது அன்பைப் பெற்று, அந்த அன்புப் பாதையிலே நடப்பவன். இந்த அன்பை, யாராவது ஒருவர் குறைத்துக் கொள்வதாகத் தெரிந்தாலும், தாங்கிக் கொள்ள முடியாத பலவீனன். அன்பு ஒன்றால் பிணைக்கப்பட்டே நாம் இவ்வளவு பெரிய இயக்கத்தை இந்தப் பனிரெண்டு ஆண்டுகளிலே, கட்டிக் காத்து வருகிறோம். இது மாறாமல், வழி செய்வதென்று உறுதி கொண்டு விட்டேன். யாருக்காவது ஆத்திரமோ, அதிருப்தியோ, எது ஏற்பட்டாலும், முதலில் என்னிடம் வந்து சொல்லுங்கள். வெளியில் பேசாதீர்கள்; எழுதாதீர்கள். அப்படி யாரேனும் செய்தால், இனிமேல், 24 மணி நேரத்துக்குள் அவர்கள் மீது நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றதும் காவலர் கூட்ட முழுவதும் கையொலிசெய்து முழக்கமிட்டது! கடந்த சில மாதங்களாகக் கழகத்தில் ஏற்பட்டுள்ள பிளவுணர்ச்சிகள் பற்றி கழகத்தின் அடிமட்டம் வரையில் கலந்து பேசுவதென்கிற முடிவுக்குத், தான் வந்திருப்பதாகவும், யாரார் மீது யாராருக்கு அதிருப்தி இருக்கிறதோ அவர்களெல்லாம் தன் முன்னிலையில் அவைகளைப் பற்றிப் பேசித் தீர்த்துக் கொள்ளலாமென்றும், இப்படி ஒருவருக்கொருவர் உள்ளத்தைத் திறந்துகாட்ட ஒருஇடம்உண்டு என்று தன்னை எண்ணி நடந்தால் தகராறுகள் ஏற்படவே வழியிருக்காதென்றும் உருக்கமாக விளக்கிக் கொண்டிருக்கும்போது, கவிஞர் கண்ணதாசன் எழுந்து, யாருமே எதிர்பாராத வகையில், "இதுவரை நான் எழுதி, பேசி வந்தவைகளுக்காக வருந்துகிறேன். அவைகளுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்து ஒரே விநாடியில், எல்லோரது இதயங்களையும் தன் மாட்டு இழுத்துக்கொண்டார்! தேம்பிய நிலையில், அண்ணாவின் கரங்களிலே தன் முகத்தை வைத்துக் கண்ணதாசன் குமுறியக் காட்சி உண்மையிலேயே அவருடைய பெருந்தன்மையையும் பாச உணர்ச்சியையும் காட்டியது! அதைத் தொடர்ந்து தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியும் தன் நடவடிக்கைகளுக்கு வருத்தமும் மன்னிப்பும் தெரிவித்து, பலத்த ஆரவாரத்தைப் பெற்றார். பதவி விலகல் தந்திருந்த பொருளாளர் கருணாநிதியும், பொதுக்குழு உறுப்பினர் பதவியை விட்டிருந்த எஸ். எஸ். இராசேந்திரனும் தங்கள் விலகல் கடிதங்களை, காவலர் கூட்டத்தின், கையொலிகளுக்கிடையேத் திரும்பப் பெற்றுக் கொண்டனர். என்னென்ன எண்ணி ஏங்கினேனோ அந்த ஏக்கமும் துக்கமும் ஒரே ஒரு விநாடியில் பறந்து போயிற்று! இந்த நிலை மலரக் காரணம், கண்ணதாசன் என்றால் மிகையாகாது. செய்த தவறுக்குத்தானே எழுந்து மன்னிப்புக் கேட்டதன் மூலம் தன்னுடைய தூய்மையான உள்ளத்தைத் திறந்து காட்டியதோடு கழகத்தின்மீது படிய வந்த மாசினைத் துடைத்த அந்த மாணிக்கமனைய என் சகோதரனை என்றும் நான் வாழ்த்துவேன்!!

## கண்ணதாசன் காட்டிய கண்ணியம் எண்ணிடின் இனிக்கும் இன்பமாகும்!

இந்தநிலை, மலர்ந்த பிறகு என்ன வேலை எமக்கு? வெகு விரைவில் கூட்டம் முடிந்தது. குளிர்ந்தது இதயம். கையோடு கை சேர்த்தும், கட்டிப்பிடித்தும் நேற்றுவரையிலே நெருப்பும் பஞ்சும்போல் இருந்தோரெல்லாம் குலாவினர். கண்ணதாசனைக் கட்டிக் கொண்டார் எம். ஜி. ஆர். எம். ஜி. ஆரை ஆரத்தழுவினார் எஸ். எஸ். ஆர் கருணாநிதியை ஓடி அணைத்து உச்சி மோர்ந்தார் கண்ணதாசன் இப்படியாக ஏழெட்டு ஆண்டுகளாகவும், இரண்டு ஆண்டுகளாகவும் என்னென்னவோ தவறான எண்ணங்களால் தடுமாற்றம் கண்டோரெல்லாம் அண்ணனும் தம்பியும்போல் அகமகிழ்ந்த காட்சி அடடா இங்கன்றி எங்கு காண முடியும்? வளரும் இயக்கங்களில் கருத்து வேற்றுமைகள், சில்லரைத் தகராறுகள் இல்லாமல் இருக்க முடியாது. ஆனால் அவைகளைப் பேசித் தீர்ப்பதும் பிரச்சனைகளை யார் வளர்த்ததாகக் கருதப்படுகிறதோ அவர்களே மன்னிப்புக் கேட்பதும் 'மன்னிக்க மாட்டோம்! இரண்டில் ஒன்று", என யார் குதித்துக் கொக்கரித்தனரோ அவர்களே அணைத்துத்தழுவுவதும் உலகில் எங்கேநடந்திருக்கிறது? எடுத்துக் கொள்ளுங்கள் காங்கிரசை! எத்தனையெத்தனை தகராறுகள், முளைத்தன. அதனையெல்லாம் அங்கே இதுபோலத் தீர்க்க முடிந்திருந்தால் ஆசாரியா கிருபளானி விலகியிருப்பாரா ஜயபிரகாஷ் நாராயண் வெளியேறியிருப்பாரா, முன்ஷி ஓடியிருப்பாரா, ஆச்சாரியார் வந்திருப்பாரா? அகில இந்தியத் தலைவர்கள் மட்டுமின்றி ஒவ்வொரு மாநிலத்திலும் பலபேர் வெளியேறி பற்பல பாதைகளில் சென்றிருப்பார்களா! காங்கிரஸ் கட்சியைப் போல, என்றோ ஒருநாள் கூடிப் பிறகு பிரிந்து போகிறவர்களைக் கொண்டதல்ல நம் கழகம். இங்கே காணப்படக் கூடியபாசத்தை எங்குமேகாண முடியாது! எப்படியோ தெரியவில்லை கழகத்தின் அடிமட்டத்திலிருந்து இந்தப் பாசம் வளர்ந்து, ஓங்கி;அந்தப் பாசம் அறுமென்றால், துடித்துத் துவண்டு கண்ணீர் வடித்துக் கதறக் கூடிய கட்டம் உண்டாகியிருக்கிறது!! ஓரிரு மாதங்களாக வேலூருக்குப் பிறகு ஏற்பட்ட விளைவுகள் எல்லாம், குடும்பத்தில் அண்ணன் தம்பிகளுக்குள் ஏற்பட்ட சில்லரைப் பூசல்கள்போல இவ்வளவு சீக்கிரம் தீருமென்று யாருமே எண்ணியிருக்க முடியாது. எண்ணாதது இங்கே நடக்கிறது! ஏன்?– என்பதைத் தான் நாடும் மாற்றாரும் எண்ண வேண்டும். திருவொற்றியூர், திருவெற்றியூரானதும் நெடுஞ்செழியனும் கருணாநிதியும் என். வி. என்னும். மதுரை முத்துவும், அம்பிலும் நானும் முல்லைசத்தியும் என் அத்தான் கோமல் வெங்கட்ராமனும் எம். ஜி. ஆரும், எஸ். எஸ். ஆரும், சம்பத்தின் இல்லம் சென்றோம்! அனைவரையும் கட்டிக்கொண்டு, சம்பத் வடித்தது, கண்ணீர்!!

தொல்லைகள் வரும் போது, ஒருவரையொருவர் சந்திக்காமலிருந்தால், சந்து பொந்துகள் விரிந்து, ஏதோ பெரிய தகராறு என்று கருதுமளவுக்கு, பிறர் கருத நேரிட்டு

(10-பக்கம் பார்க்க)


"நமதன்பிற்குரிய அரங்கண்ணல் அவர்களின் "அறப்போர்," நல்ல குறிக்கோளுடன், விளங்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. எதையும் நட்புறவோடும் நல்லெண்ணம் கொண்டும், நல்லதாக்கிக்கொள்ள முடியும் என்கிற அசையாத உறுதியுடன், அனைவருடனும் பழகும் என் குடும்பத்து இளவல், அவர். அன்பு செழுமிய அரங்கண்ணல் தரும் "அறப்போர்," அறம் காத்து நலம் பேணும் ஏடாக நாளும் மிளிர்வதாக!

'திராவிடநாடு' அலுவலகம் காஞ்சிபுரம்

அன்பன்,
ஈழத்தடிகள்
18-2-61



**கேரளக் கதை**




[ குட்டுவன் எனும் புனைப் பெயரில் மறைந்துள்ள என் நண்பர் கேரளத்தைச் சேர்ந்தவர். தமிழைக் கற்க எண்ணி வந்து, தமிழ்த் துறை பி ஏ. ஆனர்சு, வகுப்பில் முதல் வரிசையில் தேர்ச்சி பெற்ற, திறமைசாலி. கற்கண்டனைய கவிதைகள் எழுதுவார். அவருடைய எழுத்துக்களை அறிமுகப்படுத்துவதில், அறப்போர், மகிழ்கிறது. ]

மாதவனின் கோபக் குரல் அந்தத் தீவுத் தோப்பில் எழுந்தவுடனேயே சக்கி அங்கே ஓடி வந்து விட்டாள். காலையில் வெள்ளி முளைக்கு முன் செல்பவன் அவன்; அவனும் அவன் வள்ளமுமாக (படகு) அந்நேரத்தில் ஆற்றில் இறங்கினல் கதிர் சாய்ந்து மதி எழுந்த பின்தான் வீடு திரும்புவான். பலகல் தொலைவு படகில் சென்று, நிலைகொள்ளா ஆழத்தில் நீருள் மூழ்கி 'கக்காச் சேறு' (கிளிஞ்சல் நிறைந்த சேறு) எடுத்து குட்ட நாட்டிலுள்ள தென்னைகளுக்கு உரமிடுவதற்காகக் கொடுப்பதுதான் அவன் தொழில். குளிர்ந்த நீருக்குள் வியர்ப்படையும் விந்தையான வேலை அது. அந்தப் பேருழைப்பிற்காக அவனுக்குக் கிடைக்கும் நாள் கூலி இரண்டோ மூன்ரே ரூபாய். மழைக்காலம் தொடங்கி ஆற்றிலும் ஏரியிலும் வெள்ளம் வந்து விட்டால் குறைந்தது மூன்று மாதங்களுக்காவது அவனுக்கு வேலையும் இருக்காது. இதையெல்லாம் எண்ணித்தான் உடற் சோர்வோடு வரும் அவனுக்கு மனச்சோர்வு எள்ளளவும் அளிக்கக்கூடாது என உண்மையன்பு கொண்ட சக்கி அவனிடம் ஓடிவருவாள். அவன் கோபமாக வந்தால் அவள் பதறிவிடுவாள். அன்று அவன் அப்படித்தான் வந்திருந்தான். அவளுக்கும் அதன் காரணம் ஓரளவு தெரிந்துதான் இருந்தது.

அவள் மெதுவாகக் கேட்டாள். மாணிக்கத்துப் பறம்பிற்குப் போனீர்களா? அவன் எரிச்சலோடு கூறினன். "ஆமா அங்கேருந்துதான் வர்றேன்" அந்தப் பதிலின் தொனியிலிருந்தே செய்தி அவ்வளவு சரியில்லை என்பது அவளுக்குத் தெரிந்தது.

"என்ன சொன்னுங்க?"

"என்ன சொல்லுவாங்க! இன்னும் கொஞ்ச மேலே ஏறியிருக்காங்க"

"என்ன!"

"ஆமாம் இப்போ மூணு பவுனும் முந்நூறு ரூபாயும் வேணுமாம்"

"இப்போ என்ன செய்வது?" அவள் அலுப்போடு கேட்டாள். அவன் பதிலே பேசவில்லை. சிறிது நேரம் கழித்து அவளே பேசினள்.

"என்னத்தைச் செய்வது! நீங்கதான் உயிரே போனலும் கடன் வாங்க மாட்டீங்க. அவ வீட்டிலேயே இருக்கட்டும் அதனலே வருகிற பழியை நானே கேட்டுக்கறேன். நீங்க கவலைப் படவேண்டாம்."

அவளுடைய ஆத்திரமும் எரிச்சலும்தான் இப்படி ஆறுதற் சொற்களாக வெளிவருகின்றன என்பது அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. இருபது வயது ஆன பிறகும் தன் மகளைக் கட்டிக் கொடுக்க முடியவில்லையே என்னும் கவலை அவளுக்கு. அவனுக்கு மட்டும் இல்லையா என்ன? அதே நினைப்போடுதான் தன் அன்ருட அற்பக் கூலியிலும் சிறிது சிறிதாக மீதி வைத்து நானூறு ரூபாய் வைத்திருந்தான் அவன். அவன் தாயும் தந்தையும் ஒருவர் பின் ஒருவராகத் திடீரென்று மறைந்தனர். அவர்களுக்கு மருத்துவச் செலவும் பிறகு அடியந்தரச் செலவுமாகப் பணம் கரைந்தது. சாருவின் திருமணமும் நின்று போய் விட்டது.

மாணிக்கத்துப் பறம்பில் தங்கப்பன் மிகவும் நல்லவன். செத்துக்காரன் (கள்ளெடுப்பவன்) நல்ல வருவாய் உண்டு. அவன் சக்கிக்கும் சாருவுக்கும் தங்கம் போலத்தான். மாதவனுக்கும் அவனைப் பிடித்திருந்தது. ஆனல் சீர்கொடுக்கப் பணம் இல்லையே. மூணு பவுன், சக்கியிடமும் சாருவிடமும் இருந்தது. ஆனல் பணத்திற்கு என்ன செய்வது?

"நடக்கிறபடி நடக்கட்டும்! இந்த கடும் காப்பியைக் குடியுங்க"-சக்கி வெண்கலக் குவளையில் நீட்டின அந்த வெறுங் காப்பியை அமுதம் போல அருந்தினன் அவன், 'ஊம்' என்று ஒருஉறுமலோடு நீண்ட பெருமூச்சு விட்டான். ஏதோ தீர்மானத்திற்கு வந்து விட்டான் என்று தோன்றியது.

மறுநாள் கதிரவன் எழுந்தான், தம்பிரான் தூங்கி விழித்து வெளியே வந்து பார்த்த பொழுது மாதவன் நின்று கொண்டிருந்தான். மாதவனிடம் அவருக்கு ஒரு தனி அன்பும் மதிப்பும் உண்டு. அவன் நாணயம் தவருதவன் தன்மானம் மிகுந்தவன். இது அந்த ஊரார் எல்லோரையும் போலவே அவருக்கும் தெரியும். அவனிடம் அன்போடு கேட்டார்.

"என்ன மாதவா வேலைக்குப் போகல்லே?"

"இல்லை தம்பிரானே"

"ஏன், ஏதாவது விசேடம் உண்டோ"

அவன் தயங்கினன். இதுவரை அவன் தன் வாழ்நாளிலேயே ஒருவரிடம் கடன் வாங்கியதில்லை. இப்பொழுதும் அவன் நா எழவில்லை. ஆனல் அவன் மனக்கண்முன் பருவம் நிறைத்து நிற்கும் சாரு தோன்றினள்.

"ஏன் மாதவா; என்ன வேண்டும் தயங்காமல் சொல்"

அவன் மென்று விழுங்கினன். "எனக்குக் கொஞ்சம் பணம் வேண்டும்"

"உனக்கா! ஆச்சரியமாய் இருக்கே. எதுக்கப்பா"

"என் மகள் சாருவின் கல்யாணத்துக்கு"

"ஓகோ. அதுதானே பார்த்தேன். நீ கடன் வாங்கமாட்டாயே என்று. எவ்வளவு வேணும்?"



"நானூறு ரூபாய் தம்பிரானே"

"சரி. வாங்கிக்கோ வேறு யாருக்காக இருந்தாலும் கொடுக்கமாட்டேன். உன் நாணயத்திற்காக உனக்குத் தருகிறேன்" உண்மையும் அதுதான். அவன் நாணயத்தின் பரிசுதான் அந்தக் கடனகக் கிடைத்த பணம்.

"அடுத்த கன்னியில் திருப்பித் தந்துடணும்"


அவன் யோசித்தான். இன்னும் பதினறு மாதங்கள் இருந்தன. அதற்குள் எப்படியாவது திருப்பிக் கொடுத்துவிடலாம்.

"சரி. தம்பிரான் சொன்னபடி கொடுத்துடறேன்."

சாருவின் திருமணம் சிறப்பாக நடந்தது. இப்பொழுது சக்கியின் கழுத்திலும் காதிலும் ஒன்றும் இல்லாவிட்டாலும் மனதில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. மாதவனின் மனதிலும் நிறைந்திருந்தது — மகிழ்ச்சியில்லை! கவலை. கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமே.

நாட்கள் வாரங்களாகி வாரங்களும் மாதங்களாக வளர்ந்து

(10-ம் பக்கம் பார்க்க)



பனித்துளி

கனிச்சாறு

தமிழருவி

அவர் எழுத்து !

தஞ்சைப் பயிரனைய வளங்காட்டும் தமிழ் எழுதும் என் உயிரனையச் சோதரர்—உடன் பிறவா உடன் பிறப்பு—இதயத்தால் கட்டுண்ட இயக்கத்தில் இளமை தொட்டு—உணர்வுபட்டுப் போகாமல் பழகுகின்ற என் தோழர்—அரங்கண்ணல் தொடுக்கின்றார் 'அறப்போர்' எனக் கேள்வியுற்று முரசொலிக்கின்றேன் நான்.

தாயகத்தின் அடிமைத்தளை அறுப்பதற்கு—தமிழ் எண்ணம் கொழிக்கின்ற என் நண்பர் எடுத்துவிட்டார் பேனா எனும் போர்வாள் என்று கேள்வியுற்று மகிழ்ந்தேன் அன்று!

இன்று; மட மட வென மாற்றாரின் மமதைக் கோட்டை சரிவதற்கு என் மனதில் குடியிருக்கும் சோதரரும் காரணமென்று தமிழ் மண்ணில் பிறந்தவர்கள் புகழ்கின்றார்; பூரிக்கின்றேன்.

ஆரூருக்கு அடுத்திருக்கும் அழகிய சிற்றூர் திருக்குவளை—இடையில் உள்ள எழிலூர்தான் கோமல்; என் சோதரரைக் கருத்தரித்த மண்! எங்கள் இருவரையும் இணைப்பதற்குத் துணைநின்ற ஆரூர் பள்ளியை ஆயுள் முடியும் வரையினிலே மறப்பதற்கில்லை'

அந்நாள் நாங்கள் இருவர்! இருவேறு கொள்கை!

இந்நாளில் இருவர், ஒருவரானோம்—சிந்தையெல்லாம் இந்தப் பூமியின் விடுதலைக்கே என்று முடிவு செய்தோம்! கொள்கையால் மணந்துகொண்டோம், அன்புக்கோபுரத்தில் ஏறிக்கொண்டோம். ஏற்றங் காண அடியெடுத்து வைக்கின்ற திராவிடத்தின் உணர்ச்சிக்கு எங்கள் பங்கும் உண்டு என்ற பெருமை கொண்டோம்.

அந்தப் பெருமைதனை எமக்களித்த திராவிட அன்னைக்கு வணக்கம் செய்கின்றோம்.

எமைச் சேர்த்து வைத்த "தமிழ்த் தோழி, வாழ்க" என்று வாழ்த்துகின்றோம்.

இனி—ஒருவரையொருவர் வாழ்த்துவதற்கு என்ன இருக்கிறது?

அன்பு,

**மு. கருணாநிதி**

## ஒன்றாலேதான் முடியும்!

இல்லாத வளமில்லா நமது நாட்டில்
பொல்லாத நரிக்குணத்தார் ஆண்டு இற்றைச்
சொல்லாத துயரத்தால் உணர் விழந்து,
மல்லாடும் தோள்வலியும் ஒளியும் மங்கி
வல்லாளர் நம்மக்கள் வன்மை எல்லாம்
நில்லாமல் சாரெடுத்த சக்கை யாக்கும்
கொல்லாமல் கொல்லும் இழி டில்லி ஆட்சிக்
குலையினின்றும் '**அறப்போர்**' செய் தகல்வோம் வாரீர்!
தன் தாயைத் தாயென்று சொல்ல வெட்கித்
தலை நிமிரா ஆட்சியினர் செயலால் ஏங்குப்
வண்டமிழ்த்தாய் வையகத்தை ஆண்ட நல்லோள்
வளம்பெற்று, வளர்ந்தகலா அரசும் ஓச்சக்
கண்ணையிமை காக்கும்திறம் போலப் பேணிக்
கருத்தைவிட்டு பகைஎன்ற சொல்லை நீக்கி
நன்னிலையில் உய்திபெற '**அண்ணா**' காட்டும்
நல் '**அறப்போர்**' ஒன்றாலே தான்முடியும்!

**உலகொளி**
அரசர் கல்லூரி
திருவையாறு.

## ஆயுள் நண்பன்...

(9—ம் பக்கத் தொடர்ச்சி)

மாதங்களும் ஆண்டாக உருப்பெற்றன. இயற்கை மாதவனை வஞ்சித்து விட்டது. அந்த ஆண்டு ஏற்பட்ட பெரிய வெள்ளப் பொக்கத்தால் (நீருயர்வு) நான்கு மாதம் ஆற்றில் வேலையில்லை. கடனைக் குறித்த தவணையில் கொடுக்காமல் இருப்பதை அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. யோசித்தான் அவன். அவனுக்கு அதைத் தவிர வேறு வழியே தோன்றவில்லை — அவன் வள்ளத்தை விற்றுக் கடனை அடைத்துவிடுவது!!

வள்ளத்தில் ஏறி நின்று கழுக்கோலை அழுத்தி ஊன்றினான். அழகாக அசைந்தது அந்தப் படகு. ஆனால் அவன் நெஞ்சமோ புயல் போலச் சீறியது. இவ்வளவு நாள் அல்லும் பகலும் அயராது உழைத்த உழைப்பின் பயன் அந்த வள்ளம்! அவன் நண்பர்கள் எல்லோரும் வாடகை வள்ளத்தில் வேலை செய்ய அவன் மட்டும் சொந்த வள்ளம் வைத்திருந்தால் எவ்வளவு பேருக்குப் பொறாமை! அதை வாங்கி ஆற்றில் முதல் நாள் செலுத்திய போது அவன் அடைந்த இன்பந்தான் எவ்வளவு!

அந்த வள்ளம் வந்த அடுத்த ஆண்டில்தான் சக்கியும் அவன் வீட்டிற்கு வந்தாள். சக்கியை அவனால் பிரியமுடியுமா? அப்படியானால் அவளைவிட நீண்ட நாள் அவன் வாழ்வில் ஒன்றுபட்டு உறவாடிய அந்த வள்ளத்தை மட்டும் எப்படிப் பிரிவது? அவனுடைய சம்பாத்தியமெல்லாம் அது அளித்த பரிசுதானே! அதன் முன் முனையில் அவன் ஆசையோடு செய்து வைத்த அன்னச் சேவல் அவனைப் பார்த்துக் கண்ணீர் சிந்துவது போல் தோன்றியது அவனுக்கு! இந்த நண்பனையா பிரியப் போகிறோம். நாளை வேறொருவனின் சொத்தாக இதே ஆற்றில் போவதா? அவனுடைய தன்மான உணர்ச்சி அவனை ஆழங் காணமுடியாத பாழ்கிணற்றில் அழுத்துவது போலிருந்தது.

அவன் வள்ளம் காயலில் (ஏரியில்) சென்று கொண்டிருந்தது. எதிரே நீராவிப் படகு வெகு வேகமாக வந்து கொண்டிருந்தது. அதன் அலையால் அவனுடைய உள்ளம் ஆடியது. அவன் கைகள்—எத்தனையோ புயல்களையெல்லாம் சமாளித்துப் படகு செலுத்திய வலுவேறிய அவன் கைகள் தளர்ந்து போனவைபோல் தோன்றின. படகு புரளத் தொடங்கியது. அதோ கவிழ்ந்தும் விட்டது. ஆனால் அவன் படகிலிருந்து குதிக்கவே இல்லை. கரையிலிருந்தும் நீராவிப் படகிலிருந்தும் ஆட்கள் நீரில் மூழ்கிப் படகை எடுத்தபொழுது அதன் நடுப் பலகையை ஆரத் தழுவிக் கொண்டு கிடந்தது மாதவனின் சவம்.

ஆம்! அந்த ஆயுள் நண்பனை பிரிய மனமில்லாமல் இந்த உலகத்தையே பிரிந்து விட்டான் அந்த நன்றியுள்ள உழைப்பாளி!!

## நாம் எல்லாம்...

(8—ம் பக்கத் தொடர்ச்சி)

விடுகிறது. ஆனால், ஒருவருக்கொருவர் சந்தித்து, நீ இப்படிச் செய்யலாமா? நான் அப்படிச் செய்தது தவறா? என்று உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ளும்போது, ஆனந்தக் கண்ணீர்; நம்மை அறியாமலே அலைமோதுகிறது! அய்யோ இப்படி இவர் மனம் நோகப் பேசினோமே, எழுதினோமே என்கிறதுக்கத்தாலும் கொட்டுகிறோம் கண்ணீர்! பகைமை உணர்ச்சி இருதயத்தில் இருக்குமானால் எவருக்கும் கண்ணீர் வராது. அந்தக் கண்ணீரிலே தூய்மையும் இருக்காது. எப்படி கண்ணீருக்குப் பேதம் கிடையாதோ அதே போல கழகத்தின் கண்மணிகளுக்குள்ளும் வேற்றுமைகள் இருக்க முடியாது. ஏனெனில் நாம் எல்லாம் ஓர் குடும்பம்! நமக்குள் சிறுசிறு மாறுபாடுகள் தோன்றிடின், கூடிப் பேசி குறைகளைவோம்! அன்பு வழியால் வெல்வோம்!! ஆற்றல் மிக்க வீரர்கள் எனப் பெயர் பெற்ற ஜூலியஸ் சீசரும், அண்டனியும், புருடசும்; அகஸ்டசும் உலவிய உரோமாபுரி அழிந்து மண்ணாகக் காரணம் வெற்றிச் சின்னங்களாகி உலவிய தளபதிகள் அனைவரும் வீண் ஜம்பத்துக்கு ஆளாகி, அன்பை மறந்து, நீ பெரியவனா நான் பெரியவனா என்கிற கர்வத்துக்கு ஆட்பட்டுக் கடைசியில் ஒருவரையொருவர் ஒழிக்கப் புறப்பட்டு, எல்லோருமே அடித்துக் கொண்டு அழிந்ததால்தான் என்பர், சரித ஆசிரியர்கள். அன்பால்எதையும்சாதிக்கலாம்! அதுதான், நல்வழி! அறவழி! ஆத்திரமும், பகைமையும் வென்றதாக வரலாறே கிடையாது! ஒரு பொது லட்சியத்துக்காக ஒன்று கூடி, ஒரே குடும்பமாகிவிட்ட நமக்குள் ஏன் பொல்லாத வழிகள்? பொல்லாது விளையும் எனத் தெரிந்திடின் ஒருவரையொருவர் போய்ச் சந்தித்து மனம் விட்டுப்பேசி ஏன் தப்பு எண்ணங்களின் தலையைத் தட்டக் கூடாது? நாம் என்ன ஆபிரிக்காவில் ஒருவரும் அமெரிக்காவில் இன்னொருவருமாக இருந்து கொண்டா அரசியல் நடத்துகிறோம்? இந்தப் புத்துணர்வைத் தந்த திருவொற்றியூரை, திருவெற்றியூர் என்பேன்! கூடிப்பேசுவோம். குறை ஏற்படின் முளையிலேயே களைவோம்-நம் கொடி பறக்க வழி அமைப்போம், கொட்டுக முரசென ஆர்த்தெழுவோம், வாழ்ந்தாலும் ஒன்றாக வாழ்வோம் செத்தாலும், திராவிடத்துச் சகோதரர்காள், நாம் எல்லோரும் ஒன்றாகவே செத்து மடிவோம். உலகில் அரசியல் கட்சிகள் உண்டு-நம்முடையதைப்போல குடும்பமானவைகள் கிடையாது – இந்தக் குடும்பப் பாசத்தை வளர்ப்போம்! வாழ்வோம் வளர்வோம்!!

"நம்முடைய கடைசிக் குழந்தை யாருக்குப் பிறந்தது தெரியுமா?— என்று கணவனைப் பார்த்துக் கேட்டாள், மனைவி. எப்படியிருந்திருக்கும் அவனுக்கு!!

## ஆங்கிலக் கதை

' எப்பொழுது பார்த்தாலும் உங்களுடைய ஆசைக்கு அடிமையாக, நான்-என்ன மரப்பொம்மையா? மூன்று மாதங்கள்கூட ஆகவில்லை, நான் கடைசிக் குழந்தையைப் பெற்றெடுத்து. அதற்குள் என்னவாம் அப்படி அவசரம்? ஆண்டு பதினென்ருகிறது, உங்களுக்கும் எனக்கும் திருமணமாகி. என்ன சுகம் கண்டேன்? பெண்ணென்று பிறந்தால் குழந்தையைப் பெற்றெடுக்கும் வெறும் யந்திரம்தானு? உல்லாசமாக இருக்கவேண்டும், ஒரு தொல்லையும் இல்லாமல் சில நாட்கள் வாழவேண்டும், என்கிற எண்ணம் எனக்குமட்டும் இருக்காதா? சிச்சி! சுத்த சுயநலக்காரர்கள் இந்த ஆண்கள்! விடுங்கள் கையை! விடுங்கள் கையை" என்று, வேகமாக, விடுவித்துக் கொண்டாள் அவள். இந்தத் தாக்குதலை எதிர்பார்க்காத அவள் கணவன், நிமிர்ந்து பார்த்தான்! ரோஜா நிற மேனிக்கு அவள் அணிந்திருந்த நீல நிற ஆடை, அதிக அழகைச் சேர்த்துக்கொண்டிருந்தது. மாலை நேரத்து வானம், அவனுடைய மன மயக்கத்தை, மென்மேலும் அதிகமாக்கிக்கொண்டிருந்தது. மனைவியின் இந்தப் பேச்சைக் கேட்கவா, 'கோச்' வண்டியில் 'குஷி'யோடு கிளம்பினுன்?

கணவனும் மனைவியும், கரும்பும் ருசியும்போல் இருந்தவர்கள். வாழ்க்கையில் துன்பம் என்பதையே அறிய முடியாத குடும்பம் அது. அவன் ஒரு சீமான்; அழகன்; வாலிபன். எந்தப் பெண்ணையும் வசீகரிக்கக்கூடியவன் என்ருலும், இதுவரையில் தன் மனைவியைத் தவிர வேறு யாரையும், நிமிர்ந்துகூடப் பார்த்தறியாத நெறியாளன். எத்தனையோ சீமான் வீட்டுச் சிங்காரிகள் அவனுடைய புன்சிரிப்பைப்பெற போட்டியிட்ட போது, ஏழைக் குடிசையில் கிடந்த கேபிரியேலை, அவளுடைய அழகு ஒன்றுக்காகவே, மணம் செய்துகொண்டான். தன்னுடைய மனதையும், அவளிடம் ஒப்படைத்தான்.

"வெறும் வார்த்தைப் பின்னல்! எனக்காகவா, இவர், அந்தஸ்து ஆடம்பரங்களைத் தியாகம் செய்தார்? தனக்காக! தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக! அழகாயிருந்த என்னை அடைந்து அனுபவிக்க வேண்டுமென்பதற்காக! பணம் இருந்ததால், பாவம் என் அப்பாவும் அம்மாவும் மிரண்டு போய் என்னை இவருக்குக் கொடுத்தார்கள். வேறு பெண்களைப்போல் காதல், ஊதல் என்று அலையாதவளாதலால் நானும், சரி, நல்ல கணவர், நாம் ஆனந்தமாக வாழ வழி செய்வார், என்று வந்தேன். ஆனுல் என்ன சுகம் கண்டேன். எபபொழுது பார்த்தாலும் வயிற்றிலே கனம்! அந்தச் சுமை இறங்கியதும் அடுத்தபடி ஒரு சுமை!! அப்பப்பா, போதும், போதும், இந்த வாழ்வு. குழந்தைகள்தான் ஏழாகிவிட்டனவே, கொஞ்சகாலம் சும்மாயிருந்தால் என்ன? மறுபடியும் என்னை வலம் வருகிருர். உழைத்தத் தொழிலாளிக்குக் கூட ஓய்வுண்டு. மிருகங்களுக்குக்கூட அசைபோட நேரம் கிடைப்பதுண்டு. அதுகூடவா, எனக்குக் கிடையாது?'' என்று மனதுக்குள்ளேயே வருந்தி, வருந்தி, எப்படியாவது, இத்தடவை, தன் கணவனை படுக்கையருகில் வரவிடாமல் பார்த்துக்கொள்வது என்கிற திடமான முடிவுக்கு வந்திருந்தாள்' அவன் என்ன, எந்த ஆடவன்தான், மனமெனும் குதிரைக்குக் கடிவாளம்போட்டு ஞானியாக முடியும்? அதிலும் மனதைக் கவர்ந்த மனைவி, அவள்! சிரித்தாலும் பேசினுலும், தேனும் பாலும் சொட்டுவதாக எண்ணி யெண்ணி, தன் மனைவியைத் தவிர உலகிலேயே அழகி கிடையாதென்று, அவளிடம் தன்னை ஒப்படைத்தவன், அவன்!! பிறரைப்போல வேறு ஏதாவது வேலையிருந்தாலும், கவனமும் கருத்தும், அதில் செல்லும். வேண்டிய சொத்துக்களை விட்டுப்போயிருந்தனர், அவன் பெற்ருேர்கள். வீட்டில்தான் எப்பொழுதும் சாப்பிடுகிருேமே! வெளியில்போய் ஒரு நாளைக்கு 'வேறு எதையாவது' உண்டுவந்தால் என்ன!— என்று நினைக்கக்கூடிய நெஞ்சினனும் அல்ல. என்ன செய்வான்? எழில் இருக்கிறது அருகில்! இதயமோ துடிக்கிறது அனுபவிக்க!! அவளோ முள் போல குத்துகிருள், நெருங்கினுல். மூளையில்லையா உமக்கு, நீரென்ன மூர்க்கரா இது ஒன்றுக்குத்தானு உமக்கு நான் வாழ்க்கைப்பட்டேன் என்று வெளிப்படையாகவே கேட்டாள்.

"கேபீரியேல்! இப்படியெல்லாம் பேச உனக்கு வெட்கமாயில்லை? ஒரு குடும்பப் பெண் தன் கணவனிடம் பேசக்கூடிய பேச்சா, இது?"

"இத்தனை நாளும் பேசக்கூடாது', பேசக்கூடாது என்றுதான் இருந்தேன்! என்னைக் கட்டிக்கொண்டது முதல், ஏதாவது ஒரு இடத்துக்கு என்னை நீர் கூட்டிச் சென்றதுண்டா? விருந்துக்கோ, கேளிக்கைக்கோ என்னை நீர் கூட்டிச் சென்றதுண்டோ? உமக்கு உம்மீதே சந்தேகம்! இவ்வளவு அழகான மனைவியை வேறு எவனுவது பார்த்தால், இவளும் வேறு யாரையாவது பார்த்து விட்டால், என்று உமக்குச் சந்தேகம்......"

"சீச்சீ! இந்த வார்த்தைகளைக் கேட்கவே அசிங்கமாயிருக்கிறது கேபீரியேல். மூடு, வாயை!"

"உண்மையைச் சொன்னுல் வெட்கமாகத்தான் இருக்கும். மூடிமறைத்து, மனதுக்குள்ளேயே நான் புழுங்க விரும்பவில்லை. முதல் இரவில், நீர் என்னைப்பார்த்து என்ன கேட்டீர் என்பதை இன்னும் நான் மறந்து விடவில்லை. யாராவது ஒரு ஆடவன் அப்படிக் கேட்பானு? கலியாணம் செய்துகொண்ட மனைவியிடம், உனக்கு இதற்குமுன் யாராவது காதலன் இருந்திருக்கிருனு, இவ்வளவு அழகான உன்னை அடையயாருமே முயற்சிக்கவில்லையா, என்றுகேட்டீரே! சலனமில்லாத மனமாகஇருந்திருக்குமானுல் உமக்கு வந்திருக்குமா அந்தச் சந்தேகம்? ஒவ்வொரு தடவையும் கர்ப்பந் தரித்ததும், உம்முடைய வெற்றியாகத் தானே எண்ணினீர். எனக்குத்தெரியுமய்யா, 'இவளை பற்றி இன்னும் கொஞ்ச காலத்துக்குநாம்சந்தேகபடவேண்டிய அவசியமில்லை! கிராமப்புறஓய்வு பங்களாவுக்குப் போய்விடுவாள், குழந்தை பிறந்ததும் தான் வருவாள். இவளைப் பற்றிய கவலையில்லாமல் இருக்கலாம்.' என்ற எண்ணத்தில் என்னை அனுப்பி விடுவீர். குழந்தையைப் பெற்றெடுத்துத் திரும்பிய கொஞ்ச நாட்களுக்கெல்லாம், மறுபடியும், இதே வேலை. உம்முடைய நெஞ்சில் கைவைத்துக் கேட்கிறேன்! உமக்கு நான் பெற்ற குழந்தைகளை, என் மீது நீர் கொண்ட வெற்றியாக எண்ணினீரே ஒழிய, உம்முடைய சொந்த இரத்தம் என்று ஒருநாளாவது நினைத்ததுண்டா? என் அழகின் மீது கொண்ட வெற்றி! என் வசீகரத்தை மறைக்கும் வெற்றி! என் அழகைப்பற்றிப்பாராட்டிய பலர் உம்மைப்பார்த்து பொருமைப்பட வேண்டும் என்று நிரூபித்துக்காட்டிய வெற்றி! என்றுதானே எண்ணி இருமாந்தீர்? இப்பொழுதுகூட அந்த வெற்றிகளை ஊருக்குக் காட்டத்தானே, அடிக்கடி குழந்தைகளை அங்குமிங்கும் அழைத்துச் செல்கிறீர்—அனைவருக்கும்—காட்டுகிறீர்-குலாவுகிறீர்—கொண்டாடுகிறீர்...

அழகுக்காக அவளை மணந்



## சுட்ட நிலா

தது உண்மையாக இருக்கலாம். அது ஒன்றுக்காகத்தாஞ, அவளேத் தன் இதயம் என்று கருதிக் கொண்டிருக்கிருன். கேவலம் வெறும் உடல் சுகம் மட்டும் தாஞ ஒருகுடும்பத்தின் அடையாளம், அது ஒன்றுக் காகத் தாஞ, ஆணும் பெண் ணும் கூடிவாழ்கிருர்கள். 'ஆம்' என்ருல் அவனவன் தேவைப் பட்ட போது இச்சையைப் பூர்த்தி செய்து கொண்டு, 'ஓட் டலில்' சாப்பிடு வது போல இருந்து விடலாமே. ஒருவனே யும் ஒருத்தியையும் சேர்த்து வைத்து, 'உன்குடும்பம்வாழ்க!' என்று சொல்வதன் பொருள் என்ன. குடும்பம் என்பதை ஒரு குளத்துக்கு ஒப்பிட்டால், உடல் சுகத்தை அந்தக் குளத் தில் நிரம்பும் நீருக்கு ஒப்பிட லாம், நீரில்லாவிட்டால், குளம் இருக்கமுடியாது. ஆனுல் நீர் மட்டுந்தாஞ ஒரு குளத்துக்கு அழகு? தாமரையும், படிக்கட்டு களும், நாலுபுறமும் கரையும் என்று எத்தனே சட்டதிட்டங் கள் உள்ளன. இவைகளுக்கு மத்தியில் இருப்பதால் தானே, இதைக்குளம் என்கிருேம், இல்லாவிடில், ஆறு, அருவி, சாக்கடை என்று ஏதாவது பெயர்சொல்ல மாட்டோமா!! நம்மைப்போய், இப்படி யெல் லாம் சொல்கிருளே? குழந்தை களேப் பெற்றெடுத்தது நான் இவள் மீது கொண்ட வெற்றி என்கிருளே! இந்த விபரீதத் தை எங்கே போய்ச் சொல்வது என்றெண்ணிய அவன் மனம் வெடித்தது. ஓடிக்கொண்டி ருந்த 'கோச்' வண்டியில் உட் கார்த்திருந்த அவளுடையகரங் களேக்கோபத்தோடுபற்றிஞன். "அய்யோ!வலிக்கிறது.வலிக்கி றது", என்று அவள் கூறிய தையும் பொருட்படுத்தாமல், முறுக்கலாஞன். துடித்தஅவன் உதடுகள், ஆடின.

"என் குழந்தைகளே நேசிக்கிறேனடி, உயிரைப் போல் நேசிக்கிறேன். ஒன்றை மறந்து விடாதே. உனக்கு இந்தஅளவுக்கு சுதந் திரம் கொடுத்தவன் நான்! நான்!! உன் விருப்பு வெறுப் பைப்பற்றிக் கவலேப்படவேண் டிய அவசியமில்லே. நான் உன் கணவன். சட்டப்படி உன் கண வன். உன்னிடம் இருந்து எதையும் பெறும் உரிமைஎனக் குண்டு. இதைத் தெரிந்துக் கொள்ளடி தெரிந்துகொள்"

வலிமை நிரம்பிய அவன் கரங்களின் பிடியை தாங்க முடி யாத அவள், "ஆ;ஊ!!", என்று கத்திஞள். துடித்தாள். அப் போதும், அவன் விடவில்லே. வலிபொறுக்கமுடியாமல் அவள் அழுதாள்!

"நீங்கள் செய்வது சரியா?"

"நீ பேசியதெல்லாம் சரியா!"

"சரியா தவரு என்பதை வா ருங்கள், இப்படியே ஒருமாதா கோவிலுக்குப் போய்த்தீர்த்துக் கொள்வோம்"

வண்டி, மாதாகோவில் பக்கம் திருப்பப்பட்டது. கணவனும் மனேவியும், ஒருவார்த்தைபேசிக் கொள்ளவில்லே. வண்டி நின்ற தும், அவன் வருகிருஞ என்ப தைக்கூட அவள் எதிர்பார்க்க வில்லே. ஓடிஞள். உள்ளே உட்கார்ந்து கொண்டு கண்களே மூடிஞள். அருகில் கணவன் வந்து நிற்பதைக்கூட கவனிக்க வில்லே. தாரை தாரையாக அவ ளுடைய கண்களிலிருந்து கண் ணீர் வழிந்து கொண்டிருந்தது. அழகான புரு, அசைவதுபோல் அவளுடல் அசைந்தது. சின் னஞ் சிறு குழந்தை, ஆசிரிய ரின் பிரம்பைக்கண்டதும், வா யை மூடிக்கொண்டு தேம்புவது போல் தேம்பிஞள். அவ்வளவு பெரிய துக்கத்துக்கு என்ன கார ணம்? ஒரு சாதாரணமான சண்டைக்காகவா, இவ்வளவு கண்ணீர் வடிக்கவேண்டும்! இல்லே, தான் ஒரு இயந்திரமாக வாழ்கிருேம் என்பதற்காகவா, இவ்வளவு தூரம் கதறவேண் டும்!!

மாஸ்கரேட் பிரபுவின் மனம் ஆடியது. என்ன இருந்தாலும் கணவன் அல்லவா? கண்ணீர் வடிக்கும் மனேவியைத் தேற்ற லாம் என்று அவள் தோளில் அன்போடு கைவைத்தான். கைமேலேபட்டதுதான் தாமதம் சண்டையிடக் கிளம்பிய புலி போல, சீறி எழுந்தாள்.

"சேச்சே! உம்முடைய தொல்லேக்கு ஒரு அளவில்லே. இதே இடத்தில் என்னேக் கொன்றுபோட்டாலும் சரி! இன்றைக்கு உம்மிடம் ஒரு உண்மையைக் கூறுகிறேன். நம்முடைய குழந்தைகள் ஏழும் உமக்குப்பிறந்தது அல்ல! ஒரே ஒரு குழந்தை, இன்னெ ருத்தருக்கு....இன்னெருவனுக் குப் பிறந்தது......"

அவள் வார்த்தையை முடிக் கவில்லே. கேபீரியல்!—என்று அந்த மாதா கோவிலே இடிந்து விழுந்து விடும்படிக் கத்திஞன். வெற்றி கண்ட புலிபோல், அவள் சிரித்தாள்.

எப்படித் தாங்க முடியும் அவ ஞல்?

திகைத்தான். துடித் தான். நெற்றியில் வியர்வை வழிந்தது. நிமிர்ந்து அவளேப் பார்த்தான். அவள் சிரித்துக் கொண்டே நின்ருள்.

என்ன செய்வது இவளே? எவ்வளவு துணிச்சலோடு இதைச் சொல்கிருள்! சீச்சி!

(தொடரும்)






ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், சென்னே 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி 3/40 முல்லே அச்சகம் சென்னே-6.